# வடக்கில் குமாரசூரியர் தலைமையில் சுதந்திரகட்சி இயங்கும்

Registered as a News Paper in Ceylon    விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 308
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மார்கழி 2 ஷவ்வால் 17 வியாழக்கிழமை (17-12-70)

போன்: 7199

பொ. அம்பலவாணர்

தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

கேட்டு வாங்குங்கள்
சங்கு மார்க்
பித்தளைப் பிணைச்சல்கள்
இரண்டுபக்கமும் தறையப்பட்டது
மலிவான விலையில்
கிடைக்குமிடம்:-
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130    தந்தி: KATHIR

கொழும்பு, புதன்
வடபகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இனி தபால் அமைச்சர் திரு செல்லையா குமாரசூரியர் தலைமையில் இயங்குவதென முடிவுசெய்யப்பட்டுள்ளது.

வடபகுதி சுதந்திரக்கட்சியை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றவேண்டுமென வடபகுதி சுதந்திரக்கட்சி அமைப்பாளர் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டம் தபாலமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வடபகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் திரு துரைராஜா மீது கோப்பாய் கிளை நிறைவேற்றிய நம்பிக்கையில்லாத் தீர்மானம் இக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது. இதுவிடயத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்திய செயற்குழுவிற்கு சமர்ப்பிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

நாளை கூடவிருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவில் இவ்விடயம் ஆராயப்படுமெனத் தெரியவருகிறது.

வடபகுதியில் சிலரின் தவறான போக்கினால் அங்குள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் கிளையை மக்கள் இயக்கமாக மாற்றமுடியாமல் இருப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பிரமுகர் ஒருவர் கவலை தெரிவித்தார்.

பின்வருவோர் வடபகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நடப்புவருட உத்தியோகத்தர்களாக தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் செல்லையா குமாரசூரியர், உபதலைவர் எஸ் ஏ காதர், அல்பிரட் துரையப்பா, இணைக்காரியதரிசிகள் எஸ் இராமலிங்கம், த. ராஜசிங்கம், தனாதிகாரி கு விநோதன்.

# இளைஞர்களுக்கு தொழிற் பயிற்சி கைத்தொழில் அமைச்சுத் திட்டம்

## எம். பி.க்களுக்கு கடிதம்

நல்லூர், வியா.
நாட்டிலுள்ள படித்த இளைஞர்களுக்குத் தொழிற் பயிற்சியளிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் இளைஞர்களைத் தொழிற் பயிற்சிக்கு அனுப்புமாறு தொகுதிப் பிரதிநிதிகள் ஒவ்வொருவரும் கேட்கப்பட்டுள்ளனர்.

அரசாங்க கூட்டுஸ்தாபனங்களிலும் தனியார் வர்த்தக நிலையங்களிலும் இளைஞர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்

இலங்கை இரும்பு கூட்டுஸ்தாபனம். கைத்தொழில் அபிவிருத்திச் சபை, தேசிய பிடவை கூட்டுஸ்தாபனம், அரசாங்க பொறியியல் கூட்டுஸ்தாபனம், இலங்கை மின்சார சபை, அரசாங்க மரக்கூட்டுஸ்தாபனம் ஆகிய பதின்மூன்று கூட்டுஸ்தாபனங்களிலும் கொழும்பிலுள்ள இருபத்தொன்பது பிரபல வர்த்தக நிலையங்களிலும் இத்திட்டத்தின்கீழ் இளைஞர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## பகுதி மாணவருக்கு பாடசாலைகளில் முதலிடம்: கல்வியதிபதி உறுதி!

பருத்தித்துறை, புதன்
'ஒவ்வொரு பாடசாலைக்கும் அண்மையில் வாழும் மாணவருக்கு அனுமதி விடயத்தில் முதலிடம் அளித்தலே விரும்பத்தக்கது. ஒரு பாடசாலைக்கு அண்மையில் வாழும் பிள்ளை அப்பாடசாலையில் இடம்பெறாது பல மைல்தூரம் வேறுபாடசாலைக்கு நடந்து செல்வது பெற்றோருக்குப் பிரச்னையை உண்டாக்கக்கூடிய விடயமாகும்.'

இவ்வாறு நெல்லியடிப் பட்டின சபை உறுப்பினர் திரு. ந. பாஸ்கரன் தலைமையில் தம்மைப் பேட்டிகண்ட தூதுகோஷ்டிக்குப் பதிலளிக்கும்போது வடமாநிலக் கல்வியதிபதி திரு. வீ. சங்கரலிங்கம் கூறினார். இடவசதியின்றியிருக்கும் அரசடி மெதடிஸ்த மிஷன் பாடசாலையிலுள்ள 8-ம் வகுப்பு மாணவரை, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திற் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற தூதுகோஷ்டியின் கோரிக்கையை அவர் ஏற்றுக்கொண்டார்' உடுப்பிட்டிக் கல்விவட்டார அதிகாரி திரு. எஸ். மகேஸ்வரஐயரும் இதில் கலந்துகொண்டார்.

## ரூ. $1\frac{1}{2}$ லட்சம் 'செக்' திரும்பியது

யாழ்ப்பாணம், வியா.
கோண்டாவில் பஸ் டிப்போ ஊழியர்களுக்கு போனஸ் வழங்குவதற்காக இங்கு அனுப்பப்பட்ட பணம் நேற்று திருப்பியனுப்பப்பட்டது.

இலங்கைப் போக்குவரத்துசபைக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதால் தற்பொழுதுள்ள நிலையில் பஸ் ஊழியர்களுக்கு போனஸ் வழங்குவதில்லையென மந்திரிசபை நேற்று முன்தினம் முடிவு செய்தது.

மந்திரிசபையின் முடிவைத் தொடர்ந்து இங்கு பஸ் ஊழியர்களுக்கு போனஸ் வழங்க அனுப்பப்பட்ட

## தமிழரசு எம். பிக்கள் சிபார்சு செய்யவில்லையாம்

நல்லூர், புதன்
தராதரப்பத்திரமற்ற ஆசிரியர்கள் தெரிவு சம்பந்தமாகத் தமிழரசுக்கட்சியைப் பொறுத்தவரை எந்த எம். பி. யும் யாரையும் சிபாரிசு செய்யவில்லையென உடுப்பிட்டி எம். பி. திரு. கே. ஜெயக்கொடி தெரிவித்

யத்தைக் கொடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

திரு. ஜெயக்கொடி மேலும் கூறியதாவது: தராதரப் பத்திரமற்ற ஆசிரியர்களைச் சிபாரிசு செய்யும்படி கல்வி அமைச்சிலிருந்தோ வேறு எவ்விடத்திலிருந்தோ

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, புதன்
இன்று இழுக்கப்பட்ட தேசியலொத்தர் சபையின் சுவீப் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு
03 J 0121    ரூ. 97,580

2-வது பரிசு
34 C 0092    ரூ. 39,032

3-வது பரிசு
33 U 0234    ரூ. 9,758

தலா ரூ 487-90 சதம் பரிசுபெறும் டிக்கட்டுகள் வருமாறு.

| | |
|---|---|
| 09 A 0709 | 21 A 0667 |
| 20 A 0249 | 31 B 0056 |
| 33 B 0703 | 22 C 0252 |
| 32 C 0932 | 03 D 0468 |
| 40 D 0643 | 26 D 0643 |
| 34 E 0792 | 01 B 0726 |
| 14 E 0557 | 01 E 0782 |
| 24 E 0416 | 37 E 0701 |
| 35 F 0003 | 20 F 0505 |
| 22 F 0498 | 38 F 0046 |
| 22 F 0002 | 19 F 0100 |

| | |
|---|---|
| 22 K 0150 | 06 K 0405 |
| 17 L 0824 | 04 L 0633 |
| 37 L 0318 | 26 L 0069 |
| 23 L 0056 | 05 L 0857 |
| 18 L 0801 | 37 M 0599 |
| 35 M 0017 | 32 M 0401 |
| 26 N 0884 | 06 N 0566 |
| 30 N 0515 | 19 N 0787 |
| 10 O 0949 | 31 O 0065 |
| 16 O 0352 | 40 P 0449 |
| 21 P 0690 | 40 Q 0253 |
| 41 Q 0626 | 18 Q 0359 |
| 15 Q 0553 | 09 Q 0014 |
| 01 R 0461 | 27 R 0573 |
| 19 R 0003 | 26 R 0203 |
| 22 R 0345 | 34 S 0753 |
| 19 S 0551 | 01 S 0229 |
| 28 S 0961 | 24 T 0064 |
| 07 T 0643 | 22 T 0466 |
| 29 U 0748 | 29 U 0030 |
| 23 U 0314 | 35 U 0514 |
| 04 V 0507 | 36 V 0521 |
| 24 V 0500 | 31 V 0672 |
| 35 V 0030 | 33 W 0561 |
| 36 W 0026 | 29 W 0449 |
| 33 X 0187 | 26 X 0098 |
| 05 X 0977 | 05 Y 0556 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகும்.'

இவ்வாறு நெல்லியடிப் பட்டின சபை உறுப்பினர் திரு. ந பாஸ்கரன் தலைமையில் தம்மைப் பேட்டிகண்ட திரு. எஸ். மகேஸ்வரஐய ரும் இதில் கலந்துகொண்டார்.

# குடியிருப்புத் திட்டம்

நல்லூர், புதன்

ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் கடற்றொழிலாளர்களுக்கும் வீடமைப்புத்திட்டம் ஏற்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது இதற்கான நடவடிக்கைகள் மீன்பிடி இலாகாவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமது தொகுதிகளில்கடற்றொழிலாளருக்கு வீட்டுத் திட்டம் உருவாக்குவதற்குப் பொருத்தமான இடங்களைத் தெரிவுசெய்து அறிவிக்குமாறு சகல எம். பிக்களையும் மீன்பிடி இலாகா டைரக்டர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# வல்வெட்டித்துறைநகரசபை தேர்தல் முடிவுகள்

வல்வெட்டித்துறை, வியா.

நேற்று வல்வெட்டித் துறை நகரசபையின் தேர்தல் மிகவும் அமைதியாக நடைபெற்றது. இதுவரை காலதும் பட்டினசபையாக இருந்து நகரசபையாக்கப் பட்டபின் முதல் தேர்தல் இன்று நடைபெற்றுள்ளது. இத்தேர்தலில் முன்னாள் முதல்வர் திரு வி. இரத்தினவடிவேல் 6ம் வட்டாரத்தில் வெற்றிபெற்றார்.

8-ம் வட்டாரத்தில் போட்டியிட்ட முன்னாள் உபதலைவர் திரு நா பாக்கியலிங்கமும் வெற்றிபெற்றுள்ளார்.

1ம் வட்டாரம் திரு இ. சிவதாஸ்

2ம் வட்டாரம் திரு த சுந்தரமணி

3ம் வட்டாரம் திரு தி. வேலுப்பிள்ளை

4ம் வட்டாரம் திரு பொ. வேலும்மயிலும்

5ம் வட்டாரம் திரு து நவரத்தினம்

6ம் வட்டாரம் திரு வி. இரத்தினவடிவேல்

7ம் வட்டாரம் திரு ச. நாராயணசாமி

8ம் வட்டாரம் திரு நா. பாக்கியலிங்கம். (முன்னாள் உப தலைவர்)

9ம் வட்டாரம் திரு இ. மகாலிங்கம்

# சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு அரசின் தோல்வியைக் குறிக்காது

## இந்திரா கூறுகிறார்

புதுடில்லி, டிச 16

ராஜமான்ய ஒழிப்புக்கான ஜனாதிபதியின் உத்தரவை ரத்துசெய்து சுப்ரீம்கோர்ட் அளித்ததீர்ப்பு அரசாங்கத் தின்தோல்வியைக்குறிக்காது என்று பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி கூறினார்.

இந்திய மேல்சபையான ராஜ்ய சபையில் பிரதம மந்திரி பேசினார்.

இது சம்பந்தமான மசோதாவொன்றை ராஜ்ய சபையில் தாக்கல் செய்த பொழுது மக்களின்விருப்பத்துக்கிணங்கவே அதுகொண்டு வரப்படுவதாகத்தான் கூறியதைப் பிரதமர் நினைவுபடுத்தினார் இந்தத்தீர்ப்பின் மூலம் தங்களைவெற்றி வீரர்களாகக் கருதிக் கொள்கிறவர்கள் அதிர்ச்சியடைந்து போய் இருக்கிறார்கள் என்றார் பிரதமர்

அரசியல் சாஸனத்தில் சொத்துக்கள் பற்றிய உரிமையைக்குறிக்கும் பகுதி இடைஞ்சலாக இருந்துவருவதால் அதனை முற்றாகவே ஒழித்து விட்டால் என்ன என்று கேட்டபொழுது அது இடைஞ்சல் என்று சொல்ல முடியாது, அரசியல் சாஸனம் சாசுவதமானதல்ல, அது பலநாடுகளிலும் பலதடவைகளிலும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது, மக்களின் நலனுக்காகவே சட்டமும், அரசியல்சாஸனமும், எனவே அவசியமானபோது அதனை மாற்றித்தான் ஆக வேண்டும் என்று திருமதி காந்தி குறிப்பிட்டார்.

முன்னிலையில் முடிவு செய்யது. [cut off]

மந்திரிசபையின் முடிவைத் தொடர்ந்து இங்கு பஸ் ஊழியர்களுக்கு போனஸ் வழங்க அனுப்பப்பட்ட 1 லட்சத்து 57 ஆயிரம் ரூபா செக் நேற்று திருப்பியனுப்பப்பட்டது.

## குடியேற்றத் திட்ட விண்ணப்பங்கள்

நல்லூர், வியா

முத்தையன்கட்டு வேலையற்ற வாலிபர் குடியேற்றத் திட்டத்திற்கு விண்ணப்பதாரர் 18 வயதுக்கு 30 வயதுக்கும் இடைப்பட்டவர்களாகவும் படித்த வேலையற்ற வாலிபர்களாகவும் இருக்க வேண்டும் விண்ணப்பங்கள் 21-ந் திகதிக்கு கச்சேரிக்குக் கிடைக்க வேண்டும், இதுபற்றி தன்னுடன் தொடர்புகொள்ளலாமென கோப்பாய் எம். பி. தெரிவித்தார்.

......

## தாக்கினாராம்

தாழ்வுபாடு, புதன்

தாழ்வுபாடு கிராமத்தில் இராணுவவீரர் ஒருவர் மீன் பிடிப்பவர் ஒருவரைத் தாக்கியதாக மன்னார் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## கலையரசு நூல் பற்றிய நிகழ்ச்சி

கொழும்பு, வியாழன்

69ம் ஆண்டுக்கான சாகித்திய மண்டலப் பரிசுபெற்ற ஈழத்தில் நாடகமும் நானும் என்ற என்ற கலையரசு சொர்னலிங்கத்தின் நூல்பற்றிய நிகழ்ச்சி ஒன்று இன்று இரவு 7மணிக்கு இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகும். திரு வே அ திருஞானசுந்தரம் நிகழ்ச்சியைத் தயாரித்திருக்கிறார்.

நியுயோர்க், டிச. 16

தென்னாபிரிக்கா, போர்த்துக்கல் ரொடீஷியா ஆகிய நாடுகளில் கைதிகள் கொடுமைப்படுத்தப்படுவதை ஐ நா. பொதுச்சபை கண்டித்திருக்கின்றது.

அரசாங்க கூட்டுஸ்தாபனங்களிலும் தனியார் வர்த்தக நிலையங்களிலும் இளைஞர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கையெடுத்துள்ளது.

மூன்று கூட்டுஸ்தாபனங்களிலும், இருபத்தொன்பது தனியார் வர்த்தக நிலையங்களிலும் வேலைகளைப் பயில்வதற்கு இளைஞர்கள் ஒவ்வொரு தேர்தல்தொகுதியிலிருந்தும் தெரிவுசெய்யப்படவிருக்கின்றனர்.

கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சு அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் இந்த 'தேசிய தொழில் பயிற்சி திட்டத்தை அமுல் நடத்த இருக்கின்றது. அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி இது சம்பந்தமாக எம் பிக்களுக்கு அனுப்பிவைத்துள்ள அறிவித்தலில் இப்பயிற்சித்திட்டத்திற்கு இளைஞர்களை அனுப்பிவைக்குமாறு கேட்டுள்ளார்.

இலங்கை சிமெந்துக் கூட்டுஸ்தாபனம். ஓட்டுப்பலகை கூட்டுஸ்தாபனம், தேசிய உப்பு கூட்டுஸ்தாபனம், பரந்தன் ரசாயன கூட்டுஸ்தாபனம், இலங்கை எண்ணெய் கொழுப்பு கூட்டுஸ்தாபனம், இலங்கை கைத்தொழில் விஞ்ஞான ஆராய்ச்சி நிலையம், சிறுகைத்தொழில் கூட்டுஸ்தாபனம்,

## விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வியா

செனெட்டர் நடராசா மீதான வழக்கு நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. டயஸ் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில், கடந்த தேர்தல் நியமன தினத்தன்று காங்கேசன்துறை தொகுதியில் போட்டியிட்ட எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் கையெழுத்தை பத்திரத்தில் எழுதியதாக, எஸ். நடராசா மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் அட்வகேட் ஏ அமிர்தலிங்கம், அட்வகேட் கே சிவபாக்கியநாதன் உதவியுடனும், புறக்டர் வி ஏ ஈ பாலசிங்கத்தின் அனுசரணையுடனும் ஆஜரானார் வழக்காளி தரப்பில், அட்வகேட் ஸி சுந்தரலிங்கம், அட்வகேட் ஆர் ஆர் தங்கராசாவின் உதவியுடனும், புறக்டர் உலகநாதனின் அனுசரணையுடனும் ஆஜரானார்.

மாஜிஸ்திரேட் விசாரணையை 71-ம் ஆண்டு ஜனவரி 28-ம் திகதிவரை ஒத்திவைத்தார்

ஆசிரியர்கள் தெரிவு சம்பந்தமாகத் தமிழரசுக்கட்சியைப் பொறுத்தவரை எந்த எம். பி, யும் யாரையும் சிபார்சு செய்யவில்லையென உடுப்பிட்டி எம். பி. திரு. கே, ஜெயக்கொடி தெரிவித்தார்.

எம். பிக்கள் சிபாரிசின் பேரில், தராதரப்பத்திர மற்ற ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படுவார்களென அண்மையில் உதவி மந்திரி தெரிவித்திருப்பது ஆச்சரி[cut off]

திரு. ஜெயக்கொடி மேலும் கூறியதாவது: தராதரப் பத்திரமற்ற ஆசிரியர்களைச் சிபார்சு செய்யும்படி கல்வி அமைச்சிலிருந்தோ, வேறு எவ்விடத்திலிருந்தோ தமிழரசுக்கட்சி எம். பி.க்களுக்கு எவ்வித தகவலும் கிடைக்கவில்லை.

தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை, ஆசிரியர் நியமனத்திற்கு தாங்கள் யாரையும் சிபாரிசுசெய்யவில்லையென்றும் அவர் கூறினார்.

| | | | |
|---|---|---|---|
| 34 E 0792 | 01 E 0720 | 04 V 0507 | 36 V 0521 |
| 14 E 0557 | 01 E 0782 | 24 V 0500 | 31 V 0672 |
| 24 E 0416 | 37 E 0701 | 35 V 0030 | 33 W 0561 |
| 35 F 0003 | 20 F 0505 | 36 W 0026 | 29 W 0449 |
| 22 F 0498 | 38 F 0046 | 33 X 0187 | 26 X 0098 |
| 22 F 0002 | 19 F 0100 | 05 X 0977 | 05 Y 0556 |
| 05 F 0183 | 01 F 0632 | 39 Y 0050 | 10 Y 0326 |
| 34 F 0090 | 13 F 0304 | 04 Z 0178 | 09 Z 0388 |
| 21 F 0225 | 33 G 0542 | 07 Z 0941 | 37 Z 0827 |
| 24 G 0907 | 11 H 0384 | | |
| 03 H 0671 | 29 H 0653 | | |
| 13 H 0252 | 10 H 0108 | | |
| 25 H 0807 | 10 J 157 | | |
| 23 J 0181 | 34 J 0778 | | |
| 10 K 0036 | 11 K 0306 | | |

(இவையாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

# சபையை விட்டு வெளியேற மறுத்தார் ராஜசூரியர்

## யாழ். மாநகரசபையில் பரபரப்பு

— கா. யோகநாதன் —

யாழ்ப்பாணம் வியா

யாழ்ப்பாணம் மாநகர சபை பொதுக் கூட்டம் நேற்று மாலை ஆரம்பித்த போதுசபையில் ஏ ஜி இராஜசூரியர் இருப்பதைக் கண்ட மேயர் அவரை சபையை விட்டு வெளியேறுமாறு கூறிய போது சில நிமிடங்கள் காரசாரமாகபேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன இராசூரியர் சபையை விட்டு வெளியேற மறுக்கவே மேயர் கூட்டத்தை மறு அறிவித்தல் வரை ஒத்திவைத்தார்

சபையில் 1 ம் வட்டாரத்திற்கு உரிய ஆசனத்திற்கு பதில் சாதாரண கதிரையொன்று வைக்கப்பட்டிருந்தது திரு இராஜசூரியர் 18ம் வட்டார உறுப்பினருக்குரிய ஆசனத்தில் அமர்ந்து கொண்டார் அவருக்கு வலது பக்கத்தில் திரு அல்பிரட் துரையப்பாவும் இடதுபக்கத்தில் கே வி தெய்வேந்திரமும் அமர்ந்திருந்தனர்

நேற்று பிற்பகல் 3-15 மணி தொடக்கம் சபைக்கு வெளியில் 3 பொலிஸ் கான்ஸ்டபிள்கள் காணப்பட்டனர் திரு இராஜசூரியர் 3-20 மணிக்கு சபைக்குள் சென்றும் 18ம்வட்டார உறுப்பினரின் ஆசனத்தில் அமர்ந்து கொண்டார் 1ம் வட்டார உறுப்பினர்க்குரிய இடத்தில் வைக்கப்பட்ட சாதாரண கதிரையில்ஜனாப் எம்ஜி பசீர் வந்து அமர்ந்து கொண்டார்

மேயர் தமது ஆசனத்திற்கு வந்ததும் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின்படி, திரு. இராசசூரியா உறுப்பினர் பதவியை இழந்துள்ளதால் சபையை விட்டு வெளியேறும்படி கூறினார்.

திரு இராஜசூரியர்: நான் ஒரு உறுப்பினர்

மேயர்: நீர் ஒரு உறுப்பினரல்ல

திரு இராஜசூரியர்: நான் இன்றும் உறுப்பினர்தான்

மேயர்: சுப்பிறீம்கோட் தீர்ப்பின்படி நீர் உறுப்பினரல்ல

திரு தெய்வேந்திரன்: அவர் ஒரு உறுப்பினர்

திரு துரையப்பா: கூட்டத்தை முதலில் ஆரம்பியுங்கள்

மேயர்: முதலில் அவர் வெளியேற வேண்டும்

திரு துரையப்பா: கூட்டத்தை ஆரம்பித்தபின் அதுபற்றி பேசலாம், கூட்டத்தை ஆரம்பிக்காமல் அவரை வெளியேற்ற முடியாது.

திரு தெய்வேந்திரன்: தீர்ப்பை எதிர்த்து அவர் அப்பீல் செய்துள்ளார்

மேயர்: அதுபற்றி எனக்கு தெரியாது

திரு என் ரி செல்லத்துரை: அதற்கு அத்தாட்சி இருக்கிறது

திரு இராஜசூரியர்: தமிழில் பேசுங்கள்

மேயர்: உமக்கு உத்தர விடுகிறேன். வெளியேறுகிறீரா அல்லையா?

இக் கட்டத்தில் மேயர் கூட்டத்தை 10 நிமிடம் ஒத்திவைத்தார்.

3-40 மணிக்கு கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. சிறிது நேரத்தால் பொலிஸ் இன்ஸ்பெக்டர் கார்த்திகேசு சபைக்குள் வந்தார்.

திரு துரையப்பா இன்ஸ்பெக்டரிடம் தயவுசெய்து வெளியில் போங்கள் நாங்கள் சண்டையிடவில்லை. சபையிலிருக்க அவருக்கு உரிமையுண்டு இதுஒரு கட்டப்பிரச்னை என்றுகூறினார்.

இதைத்தொடர்ந்து திரு இராஜசூரியரின் விளக்கத்தைஇன்ஸ்பெக்டர் கேட்டார். இரத்தினபுரி எம். பி. திரு நந்தா எலவெலா சுப்ரீம்கோர்ட் தீர்ப்பு மூலம் பதவிஇழந்த பின்பும் ஆட்சிமன்றத்திற்கு சென்றுள்ளதாக திரு ராஜசூரியர்தெரிவித்தார்

திரு இராஜசூரியர் தொடர்ந்து கூறுகையில் தான் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்திருப்பதாகவும் ஆதலால் தமக்கு சபைக்குவர உரிமையுண்டென்றும் இன்ஸ்பெக்டரிடம் கூறினார். 3கூட்டங்களுக்கு வராவிட்டால் பதவி இழக்க நேரிடுமாதலால் இது மூன்றுவது கூட்டமாக இருப்பதால் தான் வந்திருப்பதாகவும் திரு இராஜசூரியர் தெரிவித்தார்.

இன்ஸ்பெக்டர் மேயரின் அறைக்குச் சென்ற சிறிது நேரத்தில் கமிஷனர் ஏ ரி சுந்தரம் சபைக்குவந்து கூட்டம் 5மணிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். 4 30 மணியளவில் இன்ஸ்பெக்டர் மீண்டும் சபைக்கு வந்து திரு இராசசூரியரின் வாக்குமூலத்தைப் பதிவு செய்தார்.

5 மணிக்கு மீண்டு சபைக்கு வந்த மேயர், சபையில் திரு இராசசூரியர் தொடர்ந்து இருப்பதால் கூட்டத்தை மறு அறிவித்தல் வரை ஒத்திவைப்பதாக கூறினார்.

மேயருடைய நடவடிக்கைகளைக் கண்டிப்பதாகவும் அவருடைய செயல் ஜனநாயகத்திற்கு விரோதமானதென்றும் திரு ஏ துரையப்பா. திரு கே வி தெய்வேந்திரமும் உட்பட மற்றும் சில உறுப்பினர்கள் உள்ளூராட்சி அமைச்சருக்கு நேற்றுமாலை தந்தி ஒன்றை அனுப்பி வைத்தனர்.

# இலங்கை விஞ்ஞானி தாயகம் வருகிறார்

கோட்டை, புதன்

உலகப் புகழ்பெற்ற இலங்கை விஞ்ஞானியான திரு சிறில் பொன்னம்பெருமா இன்று இலங்கை திரும்புகிறார். இவர் இங்கு விரிவுரைகள் நடத்துவதற்காக வருகிறார், யாழ்ப்பாணம், கண்டிகாலி கொழும்புஆகிய இடங்களில் சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்.

திரு சிறில் பொன்னம் பெருமா சுவீடன், பிரான்ஸ் இத்தாலி, இந்தியாபோன்ற நாடுகளுக்கு விஜயஞ்செய்து விஞ்ஞான ஆய்வுரைகளை நிகழ்த்தியுள்ளார்.

திரு பொன்னம் பெருமா இலங்கையில் ஒருமாதம்தங்கியபின் தாய்லாந்து மலேஷியா, ஜப்பான் ஆகியநாடுகளுக்குச் செல்லவிருக்கிறார், கலிபோர்னியா விண்வெளி ஆய்வுகூடத்தில் கடமையாற்றி வருகிறார். உலகில் இல்லாத ஒருவகை அமினோ அமிலத்தை இவர் கண்டுபிடித்ததினால் உயிரின் தோற்ற வளர்ச்சியில் புதிய ஒரு திருப்பம் ஏற்பட்டிருப்பது மட்டுமல்லபூமியைவிட வேறு ஏதாவது கிரகத்தில் உயிரினங்கள் வாழக் கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கிறதென்பதையும் புலப்படுத்தியுள்ளது. அவுஸ்திரேலியாவிலுள்ள விக்டோரியாவுக்கு அருகே உள்ளகடலில்கடந்த வருடம் செப்டம்பர் மாதம் விழுந்த வான் வெள்ளியில் இந்த புதிய அமினோ அமிலம் இருந்ததை அவர்கண்டு சொன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

காணி:

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் காங்கேசன் துறை வீதியில் கடையும் கட்டிடமும் அமைந்துள்ள ஒரு பரப்பும் 15 குழியும் உள்ள காணி விற்பனைக் குண்டு. தொடர்பு கொள்க விளம்பர இல: 2429, மே/பா 'ஈழநாடு', த. பெ எண் 49, யாழ்ப்பாணம்.
2429

1. நாவற்குழி புகையிரத நிலயத்தில் இருந்து 50 யார் தூரத்திலுள்ள ஒவ்வொன்றும் 4 பரப்புக் கொண்ட இரு துண்டுக் காணிகள். 2. தென்னை, மா, பலா ஆகியன நிறைந்துள்ளதும் பளை புகையிரத நிலய கைகாட்டி ஸ்தம்பத்துக்கு பக்கத்திலுமுள்ளதான 62 பரப்புக் காணியும் கல் வீடும். 3 தென்னை, வாழை, மா மற்றும் பழ மரங்கள் பயிரிடப்பட்ட சுந்தரபுரத்தில் பரந்தன் முல்லைத்தீவு வீதியில் உள்ள 3 பங்குகளைக் கொண்ட 25 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. கடித மூலமாகவோ அல்லது நேரடியாகவோ தொடர்பு கொள்ளவும். வின்ஸ்லோஸ், 149, பவர்கவுஸ் ரோட், யாழ்ப்பாணம்.
2552

### தேவை

''சிலம்பொலி'' ஏட்டிற்கு இலங்கை எங்கும் விற்பனைப் பிரதிநிதிகளும், கமிஷனுக்கு விளம்பரம் சேகரிப்பவரும் தேவை. முகவரி: நிர்வாகி 'சிலம்பொலி', பழை, தெல்லிப்பளை.
2579

உருத்திரபுரம் சிவாலயத்துக்கு பூசகர் தேவை. இருப்பிட வசதியுண்டு. 25-12-70க்குள் விபரங்களுடன் பண்டிதர் மு. ஆறுமுகம், உருத்திரபுரம் என்ற விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும்.
2430

## வெற்றுச் சாக்குக் கேள்விப் பத்திரம்

எங்கள் சங்கத்திலிருக்கும் சுமார் 10,000 வெற்றுச் சாக்குகளுக்கு கேள்விப்பத்திரம் கோரப்படுகிறது. உரிய விண்ணப்பப் பத்திரத்தை ரூபா 2/- கொடுத்துச் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் ரூபா 250/- வைப்புப்பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் வெற்றுச் சாக்குக் கேள்விப்பத்திரமெனத் தபால் உறையின் மேல் எழுதி 25-12-70 பகல் 12 மணிக்குப் பிந்தாது சங்கக் கந்தோரில் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

க. கணபதிப்பிள்ளை,
பொதுமுகாமையாளர்,
அ. ப. நோ கூ. சங்கம்,
2594 அளவெட்டி.

### கல்வி

வகுப்பு:

பின்னேரங்களில் ஆங்கிலமும் எண்ணும் பத்தாம் வகுப்பு வரையுமுள்ள மாணவர்களுக்குக் கற்பிக்கப்படும். 5-1-71 தொடக்கம் சிறுவர் பாடசாலையும் நடைபெறும். விபரங்களுக்கு! திருமதி சிவசுப்பிரமணியம் ஒய்வு பெற்ற ஆசிரியை, தலையாளி, கொக்குவில்.
2431

## அதிபர் தினம்

கல்முனை, புதன்

கல்முனை பாத்திமா கல்லூரியில் அதிபர் தினம் வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக மேற்படி கல்லூரியில் அதிபராக கடமையாற்றிவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வண. ஞானச்சகோதரர் இம்மனுவல் அடிகளின் சேவையைப் பாராட்டுமுகமாக இத்தினம் கொண்டாடப்பட்டது.


ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

எம்.ஜி.ஆர்—லட்சுமி
ஜெயலலிதா — அசோகன்
நடித்த

மாட்டுக்கார வேலன்

யாழ். வின்ஸர் திரையில்
தினசரி 4 காட்சிகள்
★ ராஜன் ★ ரவிச்சந்திரன்


## இன்றைய பலன்

மார்கழி மீ 2-ந் திகதி

(17-12-70)

மேஷம்- வெற்றிப்பாதையில் வீறு நடை போடுவீர்கள். தொழில்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும். சுபதினம்.

ரிஷபம்- வாழ்க்கை இன்று மல்லிகைத் தோட்டம்போல் மணம் பரப்பிக் கொண்டிருக்கும். காதல் சிட்டுகளுக்கு இன்று கவர்ச்சிகரமான தினம்.

மிதுனம்- கடன்தொல்லைகள் அதிகரிக்கும். கூட்டு வியாபாரம் ஏமாற்றத்தை தரலாம். தனிவழிப்பயணத்தைத் தவிர்த்துக் கொள்ளவும்.

கடகம்- நான்என்ற அகம்பாவம் தலைதூக்கி நிற்கும் வேண்டியவர்களின் ஆலோசனையைக் கேட்காததால் பின்பு வருந்த நேரிடும்,

சிம்மம்- சொற்சிலம்பம் ஆடுவதில் இன்று முன்னணியில் நிற்பீர்கள். சொகுசான வாழ்வும் கிடைக்கும் வரவேற்கவேண்டிய தினம்.

கன்னி- குடும்பக் கவலை தலைதூக்கும். பிதாவழி பிணிக்கும் இடமுண்டு. மிகவும் சுமாரானதினம். தெய்வநம்பிக்கை நன்று.

துலாம்- நீண்ட நாள் பிணக்கு இன்று நிவர்த்தியாகும். வாகனச்சாரதிகளுக்கு வளமான திருப்பம் ஏற்படும். சிறப்பானதினம்.

விருட்சிகம்- எண்ணம்போல் வாழ்வு இன்று மலரும்; சிலருக்கு திடீர் திரவிய லாபமும் கிடைக்கும் கலகலப்பான தினம்

தனுசு- சிறியவிடயம்கூட இன்று சிரமமாகத் தோன்றும். உள்வீட்டிலே பூசல்கள் தலைதூக்கும். திருப்தியற்ற தினம்,

மகரம்- குடும்பத்தில் குதூகலம் தென்படும் களவு திரவழியால் நன்மைகளுக்கு இடமுண்டு. மகிழ்ச்சியான தினம்.

கும்பம்- அதிக நம்பிக்கை ஆபத்தைத் தேடித்தரலாம். தன்கையே தனக்குதவி என்று செயலாற்றவும்.

மீனம்- உங்கள் நடவடிக்கையில் தனிச்சிறப்பு தென்படும். சிலர் வாழ்க்கையில் பொதுசனத் தலைமைக்கும் இடமுண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

### டாக்டர்கள்

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வியாழன் 17—12—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

844 மீ. அல்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 குரல்வகை, 7-45 திரைகானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்,

344 மீ. அல்ட் 49 மீ.

பகல் 12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

344 மீ. அல்ட் 61 மீ.

மாலை 4-25 சங்கமம், 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நாளையசந்ததி.

இரவு 6-15 வாத்தியஇசை 6-30 நாட்டுப்பாடல்கள், 7-00 திரைகானம், 7-15 பாட்டு, 7-45 ஐநாசித்திரம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-20 பேச்சு, 9-30 நாடகம், 10-30 செய்தித்தொகுப்பு.

......

## இடமாற்றம்

உடுவில், புதன்

மானிப்பாய்மெமோறியல் மகாவித்தியாலய கணித ஆசிரியை திருமதி எம், ஜி சம்பந்தன் இம்மாதம் 6-ம் திகதி முதல் மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். ஜி. சி. ஈ, வகுப்பு மாணவர்கள் இவருக்கு பிரியாவிடைவிருந்து அளித்தனர்.

0 0 0

சுழிபுரம், புதன்

தொல்புரம் அரசினர் வைத்தியசாலைக்கு புதிய அப்போதிக்கரியாக சுழிபுரத்தைச் சேர்ந்த திரு. வி; கணபதிப்பிள்ளை அடுத்த ஆண்டு தொடக்கம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்

0 0 0

முல்லைத்தீவு, புதன்

முல்லைத்தீவு பட்டினசபை மின்சார அதிபராகக்கடமை யாற்றும் திரு. இ; பலேந்திரசர்மா ஜவணரி முதல் வல்வெட்டித்துறை பட்டின சபைக்கும், மேற்படி சபையில் லிகிதராகக் கடமையாற்றும் திரு, ஸ்ரீஸ்கந்தரா[illegible] அடுத்தமாதம் முதல் யா[illegible] மாநகரசபைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

0 0 0

அடம்பன், புதன்

# ஓய்வு பெறும் ஆசிரியர்கள்

### திரு. க. சபா ஆனந்தர்

திரு. க. சபா ஆனந்தர் நயினாதீவு மகாவித்தியாலயத்தில் கடந்த 5 ஆண்டுகளாக அதிபராகக் கடமையாற்றியுள்ளார். 40 வருடகாலங்களாக ஆசிரியப்பணியில் திறம்பட ஈடுபட்ட இவர் சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதில் அயராது உழைப்பவர்.

0 0 0

### திரு. சிவானந்தையர்

கொல்லங்கலட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் அதிபரான இவர் புலியூர்ப்புராணம் என்ற நூலை இயற்றிய திரு. சிவானந்தையரின் மருகராவர் இப்பாடசாலையின் உதவிஆசிரியர்களான திருமதி பறுபதம், திரு பொ. அருணாசலம் ஆகியோரும் ஒய்வுபெறுகின்றனர்

0 0 0

### திரு. ஐ. பொன்னையா

அதிபர் திரு பொன்னையா பாடசாலை நிர்வாகத்தில் மட்டுமன்றி சமூகத்தொண்டிலும் ஈடுபட்டுபெரும்பணி செய்தவர். ஆசிரியத்தொழிலைப் புனிதமாகமதித்த பெரியார் இவர்' என மல்லாகம் இந்துக்கல்லூரி ஆசிரியர்கள் தங்களது அதிபராகிய இவருக்கு பாராட்டுவிழா நடாத்துகையில் குறிப்பிட்டனர்

0 0 0

### திருமதி மேதர்

திருமதி எம் மேதர்மானிப்பாய் மெமோறியல் மகாவித்தியாலய ஆசிரியையாவர். பாடசாலை மாணவர்களும் ஆசிரிய நல்லுறவுமன்றமும் பிரிவுபசாரம் நடாத்தி இவரைப் பாராட்டின.

0 0 0

### திரு. கு. சபாரத்தினம்

நீர்வேலி தெற்கு இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் பல ஆண்டுகளாகத் தலைமையாசிரியராக கடமையாற்றியவர். ஆசிரிய சேவைக்கென்றே பிறந்தவர் திரு. கு. சபாரத்தினம், வரண்ட பிரதேசத்தை நல்லதொரு கல்விப்பிரதேசமாக்கியவர், இவர்நற்சேவையை நீர்வேலி மக்கள் என்றென்றும் மறவார்கள்'என பலவாறுக இவரது சக ஆசிரியர்களும், மாணவர்க[illegible]ம் பாராட்டினர்.

0 0 0

### திரு: க, சொக்கலிங்கம்

புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்தின் தலைமை

### திரு. வி, இராசசிங்கம்

[illegible]தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் 11 வருடங்களாகத் தலைமையாசிரியராகக் கடமையாற்றி வருகிறார் இசை, நாடக கலைகளில் பற்றும் ஆர்வமும் கொண்ட இவர் பல நாடகங்களைப் பழக்கி மாணவரிடையே நாடக இசைக்கலைகளை வளர்த்தவர்

0 0 0

### திரு. மா. சுப்பிரமணியம்

ஐந்தாம் குரவராம் ஆறுமுகநாவலரால் பருத்தித்துறையில் உள்ள வியாபாரி மூலையில் ஆரம்பிக்கப்பட்ட மேலைப் புலோலிச் சைவப்பிரகாச வித்தியாசாலையில் 38 வருடங்களாகத்தொடர்ந்து கடமையாற்றியவர் திரு. மா சுப்பிரமணியம். நாவலர் போதனையை பின்பற்றி சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்குச் சேவை புரிபவர், அன்று சிறு குடிசையாகவிருந்த இவ்வித்தியாசாலையை இன்று இரு மண்டபங்களோடு கூடிய பெரிய வித்தியாசாலையாக்கியபெருமை இவருக்கே உரியது.

0 0 0

### திரு: ஆர். இராஜநாயகம்

திரு. இராஜநாயகம் நெடுங்கேணி மகாவித்தியாலயத்தின் தலைமையாசிரியராவார். ஆசிரியருக்குத் தேவையான அன்பும், பொறுமையும், கடமையுணர்ச்சியும் ஒருங்கே கொண்டுள்ள இவர் மாணவர் முன்னேற்றமே தன் மூச்சாகக் கொண்டவர்.

— —

## பொதுச் சொத்தாக வேண்டும்'

மட்டக்களப்பு, புதன்

''சுதந்திரத்தைப் பாதுகாக்க வங்கிகள், தோட்டங்கள், வயல்கள், யந்திரங்கள் யாவும் சமுதாயத்தின் பொதுச் சொத்தாகப்பட வேண்டும். இவைதனிமனித உடைமையாக இருக்கும் வரை மனித அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்தமுடியாது. ஏகாதிபத்திய அமைப்பு முற்றாக மாற்றப்பட வேண்டும். அடிமைநாடுகள் விடுதலைபெறவேண்டும் அப்போதுதான் மனிதனின் விமோசனம் உண்மையான

## ஆசிரியப்பிரதிநிதிகளும் ஆட்சிமன்றத்தில் வேண்டும்

பருத்தித்துறை, புதன்

''நாட்டின் நிர்வாகத்தில் இன்று நியாயதுரந்தரருக்கும், வர்த்தகருக்கும் நிலப்பிரபுக்களுக்கும் பங்கு இருப்பதுபோல ஆசிரியர்களுக்கும் பங்கு இருக்கவேண்டும் நாளைய நீதிபதிக்கும் நியாயவாதிக்கும் அரசியல் அறிஞருக்கும் அரசியல் போதிக்கும் ஆசிரியனுக்கு நேரடியாக அரசை இயக்கும் உரிமை மறுக்கப்பட்டுள்ள நிலைமை நீங்கவேணடும் ஆசிரியருக்கென ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் ஆட்சிமன்றத்தில் நியமிக்கப்படல்வேண்டும்.

இவ்வாறு நெல்லியடி மத்தியமகாவித்தியாலய ஆசிரியர் திரு. ஏ. சண்முகநாதனுக்கும் ஆசிரியை செல்வி பதுமாசனி வீரகத்துக்கும் மேற்படி வித்தியாலயப் பேரவை அளித்த பிரிவுபசாரத்தில் தலைவர் திரு. ஏ தாமோதரம் பிள்ளை கூறினார்.

திருவாளர்கள் எம். வேலுப்பிள்ளை, எஸ். சின்னத்தம்பி ஆகியோரும் பாராட்டுரைகள் வழங்கினர்.

## 'பிள்ளைகளுக்கு'மறைக்கல்வி பெற்றோரின் பொறுப்பே'

— யாழ். மேற்றிராணியார்

பண்டத்தரிப்பு, புதன்

''தமது பிள்ளைகளுக்கு மறைக்கல்வியூட்டும் பெரும் பொறுப்பு பெற்றோரையே சார்ந்துள்ளது. பாடசாலையை மறைக் கல்விக்கு நம்பியிருந்தகாலம் மலையேறி விட்டது'' என யாழ். மேற்றிராணியார் வண. எமிலியானுஸ்பிள்ளை அகில இலங்கை மறைக் கல்வி மகாநாட்டை புனித பத்திரிசியார் கல்லூரி மேல் மண்டபத்தில் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து வந்த 500க்கும் அதிகமான மக்கள் இம்மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

திருமலை துணைஆயர் வண. தியோகுப்பிள்ளை ஆண்டகை பேசுகையில் ''பிள்ளைகளுக்கு மறைக்கல்வி ஊட்டுவதுபெற்றோரின் தவிர்க்கமுடியாத கடமையும் உரிமையுமாகின்றது பிள்ளைகளின் முதல் ஆசிரியர் பெற்றோரே. பிள்ளைகள் விவாகம் செய்யும் வரைபெற்றோரின் பாதுகாப்பிலே இருக்கின்றனர். எனவே அவர்களின் மறைக் கல்வியில் பெற்றோர்க்குப் பெரும் பொறுப்புண்டு'' என்று குறிப்பிட்டார்.

யாழ். துணை ஆயர் வண. எல். ஆர். அன்ரனி ஆண்டகை கூட்டுப் பலி நிறைவேற்றினார், வண, எச், பொன்னையா திருஉரை வழங்கினார்.

மாலை நடைபெற்ற கருத்தரங்கில் யாழ். மாநகரசபை அங்கத்தவர் திருமதி அந்தோனியா சுவாமிநாதர் பசுகையில் ''பிள்ளைகளின் உடல், மனவளர்ச்சி கருவி

## 17 சடலங்கள் மீட்கப்பட்டன

கண்டி, புதன்

ருகலை, மதுரட்டைப் பகுதிகளில் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டதாகக் கருதப்பட்ட 33 பேரில் 17 பேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன.

இப்பகுதிகளில் தொடர்ந்து பெருமழைபெய்கிறது. பல இடங்களில் மண்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன. கண்டி-நூரளை வீதியில் பாலம் உடைந்துபோனதால் போக்குவரத்து வசதிகளை மீண்டும் சீராக்குவதற்கு பதியபெலையிலிருந்து நூரளைக்கு புதிய போக்குவரத்து பாதை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைத் திருத்துவதற்காக கொழும்பிலிருந்து இராணுவப்படையின் பொறியியல் பிரிவினர் இப்பகுதிகளுக்குவந்து சேர்ந்துள்ளனர்,

— —

## இலங்கைக்கு உதவும் நாடுகள் மகாநாடு

கோட்டை, புதன்

இலங்கைக்கு உதவும்நாடுகளின் மகாநாடு அடுத்த பெப்ரவரி மாதம் பாரிஸில் நடைபெறவிருக்கிறது,

இம்மகாநாட்டுக்கு வேலைவாய்ப்பு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி டாக்டர் எச். ஏ. டி. எஸ் குணசேகரா தலைமையிலான தூதுக்குழுஒன்று பாரிஸ் செல்லும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். வின்ஸர் திரையில்
தினசரி 4 காட்சிகள்

★ ராஜன் ★ ரவிச்சந்திரன்
★ லட்சுமி
★ நிர்மலா
★ நாகேஷ்
நடித்த

# ஏன்?

17-12-70 இன்று முதல்
யாழ். வின்ஸர், றீகல்
தியேட்டர்களில்

## பரிசுத்த பாப்பரசர் 6-வது சின்னப்பரின் இலங்கை விஜயம்

30 நிமிடங்களுக்கு எல்லாக் காட்சிகளுக்கும் காண்பிக்கப்படும்.

கெப்பிட்டல் பிளாஸா மைலன்
திரைகளிலும்
யாழ். வெலிங்டன்
திரையிலும்
தினசரி பி.ப. 2-30, மாலை 6-30
இரவு 9-30, போயா நாட்கள்
காலை 10-30 மணி

ப. நீலகண்டனின் டைரக்‌ஷனில் உருவாகி



மக்கள் திலகம்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
வாணிஸ்ரீ



முத்துராமன்
அசோகன், சோ,
ஓ. ஏ. கே. தேவர்
மற்றும்பலர் நடித்த
சத்யா மூவிஸ்

# கண்ணன் என் காதலன்

தயாரிப்பு: ஆர். எம். வீரப்பன்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்

படும். சிலர் வாழ்க்கையில் பொதுசனத் தலைமைக்கும் இடமுண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## டாக்டர்கள் குடும்பம்

உடுவில், புதன்

மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலை இளைப்பாறிய டாக்டர் பாலசிங்கத்தின் மகன் டாக்டர் தளையசிங்கம், மகள் டாக்டர் சிந்தாமணி ஆகியோர் எம். ஆர். சி. பி. பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்கள். லண்டனில் உள்ள இவர்கள் விரைவில் இலங்கை திரும்புவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
படகோட்டி

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 10-00
போயா நாட்கள் 2-30
கல்யாணகுமார் - விஜயகுமாரி
நடித்த
மணி ஓசை

RAJAH
(Jaffna)
Daily at 4-45, 7-00
and 9-45 p. m.
Mike Henry
in
TARZAN AND THE JUNGLE BOY
(Scope-color)

MANOHARA
Jaffna
Daily 4-45, 7 & 9-45 p.m
Stanley Kramer's
Presents
'IT'S A MAD, MAD, MAD, MAD WORLD
(It's a best comedy film)

REGAL
Jaffna
Daily 4-45, 7&9-45p.m.
Poya days 4 shows
Dick Van Dyke
in
DIVORCE AMERICAN STYLE

சபைக்கும், மேற்படி சபையில் லிகிதராகக் கடமையாற்றும் திரு. ஸ்ரீஸ்கந்தராசா அடுத்தமாதம் முதல் யாழ் மாநகரசபைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

0 0 0

அடம்பன், புதன்

மன்னார் லெவனியா பொலிஸ் உதவிச் சுப்ரீண்டன்ட் காரியாலயத்தில் கடமையாற்றும் லிகிதர் வி. இராசதுரை அடுத்த மாதம் தொடக்கம் யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்ரீண்டன்ட் - கந்தோருக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்'

0 0 0

வல்வெட்டித்துறை, புதன்

பருத்தித்துறை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் பிரதம லிகிதராக கடமையாற்றிய திரு. எம். அருந்தவராசா பதவி உயர்வுபெற்று மட்டக்களப்பு மாவட்டத்திற்கு உதவிபிஸ்கால் அதிகாரியாக ஜனவரி முதலாந் திகதி தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## புதுவருட நிர்வாகிகள்

உடுவில், புதன்

மானிப்பாய்மெமோறியல் மகாவித்தியாலய கூட்டுறவு சங்க வருடாந்தக் கூட்டம் திரு வி ஜி சம்பந்தன் தலைமையில் நடைபெற்றது. புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்; திரு வி ஜி சம்பந்தன், உபதலைவர்; திரு எஸ் பாலசிங்கம், செயலாளர்: திரு டபிள்யூ ஞானசிகாமணி அன்னப்பா, தனதிகாரி: திரு எம் குமாரவேலு, நிர்வாகசபைஅங்கத்தவர்கள்: திரு ஏ எஸ் ஐயாத்துரை, திருமதி எஸ் ஆர் சேனாதிராசா, செல்வன் எஸ் கிங்ஸ்லி, செல்வி எஸ் விமலாம்பிகை.

0 0 0

ஓமந்தை, புதன்

இலங்கை தேசிய விவசாயிகள் முன்னணிக் கூட்டம் மகிழங்குளம் அரசினர் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: க. தம்பு, உபதலைவர்: சி. இரத்தினம், காரியதரிசி: கா. மகேஸ்வரலிங்கம், உபகாரியதரிசி: க. துரைராசா, தனாதிகாரி: சி. மகாலிங்கம். நிர்வாகசபை உறுப்பினர்: வே. தங்கராசா, வ. சிவசுப்பிரமணியம், செ. கிருஷ்ணபிள்ளை, ஆ. கதிர்காமு.

றும் மறவார்கள்' என பலவாறும் இவரது சக ஆசிரியர்களும், மாணவர்களும் பாராட்டினர்.

0 0 0

### திரு: க. சொக்கலிங்கம்

புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்தின் தலைமையாசிரியர் இவர். இவரது சேவையின் சின்னமாக அப்பாடசாலையில் உள்ளவை பல. பாடசாலையின் புதிய கட்டிடமும் இவற்றில் ஒன்று. பொதுவாழ்வினை அவரது சேவையின் பெரும்பாகத்தைப் பெற்ற பெருமை ஊரதீவுக் கிராமத்துக்கே உரியதாகும். இப்பகுதியில் உள்ள கிராம முன்னேற்றச் சங்கத்தை உருவாக்கிய பெருமை இவருக்கே உரியது.

0 0 0

### திரு. சு. இராமலிங்கம்

யாழ். மானிப்பாய் சோதி வேம்படி தமிழ்க் கலவன் பாடசாலையின் தலைமையாசிரியராவார், 39வருடகாலம் ஆசிரிய சேவையில் பணியாற்றிய இவர். வலி-வடக்கு விளைபொருள் உற்பத்தி விற்பனவுச்சங்கம், இணுவில் தாவடி விளைபொருட் சங்கம் ஆகியவற்றின் தலைவராகவும் செயலாளராகவும் கடமையாற்றியவர் தற்போது தாவடி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் உபதலைவராகவிருக்கிறார் தாவடி சைவஇளைஞர் சங்கத்தை உருவாக்கி சிறிய வாசகசாலையொன்றையும் உருவாக்கிய பெருமை இவரைச் சாரும்.

0 0 0

### திருமதி ந. நவரத்தினம்

இவர் சாவகச்சேரி மகளிர் வித்தியாலய கனிஷ்ட பிரிவின் தலைமையாசிரியர் இப்பாடசாலையில் கடமையாற்றமுன்னர் 22 வருடங்கள் அட்டனில் ஆசிரியையாகக் கடமையாற்றியவர் 41 வருடகால ஆசிரிய சேவைக்குப் பின்னர் ஓய்வுபெறும் இவர் சேவையே குறிக்கோளாகக் கொண்டு மாணவர்களுக்கு அயராது உழைத்தவர்.

0 0 0

### திரு அ. சண்முகம்

நீர்வேலி சீ. சீ. பாடசாலையில் 36 வருடங்களாகத் தலைமையாசிரியராகத் திரு. அ. சண்முகம் பணியாற்றி வருகிறார். கொட்டில்களாக அழியும் நிலையில் இருந்த இப்பாடசாலையை பெரும் முயற்சி செய்து அழகான பெரிய கட்டிடங்களைக் கொண்டு விளங்கச்செய்தவர். இப்பகுதியின் ஆசிரிய சங்கத்தில் காரியதரிசி தனாதிகாரி பதவிகளையும் வகித்துப் பெருமை பெற்றார்.

உடைமையாக இருக்கும்வரை மனித அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்தமுடியாது. ஏகாதிபத்திய அமைப்பு முற்றாக மாற்றப்படவேண்டும். அடிமைநாடுகள் விடுதலைபெறவேண்டும் அப்போதுதான் மனிதனின் விமோசனம் உண்மையானதாகும்."

இவ்வாறு மட்டக்களப்பு வின்சன்ட் குரூப்ற் மண்டபத்தில் 'மனிதஉரிமைகள்' தினக் கூட்டத்தில் சாகித்தியமண்டல உறுப்பினர் திரு. வி. பொன்னம்பலம் பேசுகையில் குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா தலைமைவகித்தார்.

## தீவுப்பகுதியில் ஐ. சோஷலிச முன்னணி

ஊர்காவற்றுறை, புதன்

ஊர்காவற்றுறையில் கூட்டணி அரசாங்கத்திற்கு ஆதரவுஅளிக்கும்நோக்கத்துடன் ஐக்கிய சோஷலிசமுன்னணி என்ற ஸ்தாபனம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இதன் அமைப்புக்கூட்டம் புளியங்கூடலில் நடைபெற்றது. முன்னாள் பட்டின சபைத் தலைவர் திரு. வி. சிவசம்பு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஐக்கிய சோஷலிச முன்னணி அமைப்பாளர் திரு. கே. துளசிகாமணி, சோஷலிச முன்னணி அமைப்பதன் நோக்கத்தை எடுத்துரைத்தார்.

திரு. மு. தளையசிங்கம் பேசுகையில் 'இலங்கைமக்களிடத்தில் ஒற்றுமை-ஐக்கியம் ஏற்படவேண்டும். தமிழர்-சிங்களவர் என இனம் பிரித்து பேசுவது தவிர்க்கப்படவேண்டும். மனிதன் என்ற உணர்வு நம்மிடையே மலர வேண்டும். அதற்காக நாம் சோஷலிசப்பாதையில் செல்லவேண்டும்' என குறிப்பிட்டார்.

திரு. ந. நாகராசா திரு கு. பத்மநாதன், திரு மு பொன்னம்பலம். திரு நராசா ஆகியோரும் பேசினர்.

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள ஒவ்வொரு தொகுதியிலும் ஐக்கிய சோஷலிச முன்னணி ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும் கருத்துத் தெரிவித்தனர்.

சுழிபுரம். புதன்

வழக்கம்பரை அம்மன் கோவிலில் நடைபெற்று வந்த காசிகாண்ட புராணப் படிப்பு நேற்றுடன் பூர்த்தியானது. கடந்த ஒரு மாதமாகத் தொடர்ந்து படிப்பு நடைபெற்றுவந்தது

ஞர், வண. எச். பொன்னையா திருஉரை வழங்கினுர்.

மாலை நடைபெற்ற கருத்தரங்கில் யாழ் மாநகரசபை அங்கத்தவர் திருமதி அந்தோனியா சுவாமிநாதர் பேசுகையில் ''பிள்ளைகளின் உடல், மனவளர்ச்சி கருவிலேயே வளர ஆரம்பிக்கிறது என்பது அறிஞரின் முடிவாகும் பிள்ளைகளுக்கு அவர்களின் அறிவுக்கு எட்டிய வகையில் அவர்களின் கேள்விகளுக்குப் பதில் கூறவேண்டும். அவர்களை விரட்டவோ பயமுறுத்தவோ கூடாது. விளையாட்டு முறைகளின் மூலமும் கட்புல செவிப்புல அறிவின்மூலமும் அவர்களின் அறிவை விருத்திசெய்யலாம். சிறுவரின் மனப்போக்கை கட்டுப்படுத்துவதினுல் பிள்ளைகளின் அறிவு வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. பாலிய குற்றவாளிகள் பெருகிவருவதற்குப் பெற்ரோரின் அசிரத்தையே முக்கிய காரணம்'' என்று குறிப்பிட்டார்.

திருமறைக் கலாமன்றத்தின் 'ஒருஒளி' நாடகமும், 'கண்டியரசன்' என்ற நாடகமும் மாநாட்டில் இடம் பெற்றன.

## 2 சத பிரயாணம் 10சதத்தில் முடிகிறது?

ஊர்காவற்றுறை, புதன்

ஊர்காவற்றுறை - காரைநகர் துறைமுகத்தில் கடந்த பல மாதங்களாக 'யந்திரப்பாதை இல்லாமையால் பிரயாணிகள் மிகுந்த கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர்

மாருதப்புரவி என்ற யந்திரப்பாதை பழுதடைந்துள்ளதால் இந்தநிலை பிரயாணிகளுக்கு ஏற்பட்டுள்ளது. இந்த யந்திரப்பாதை நீண்டநாட்களாகத் திருத்தப்படாமல் துறைமுகத்திலேயே கட்டிவைக்கப்பட்டுள்ளது.

தற்போது 'மிரிபாதை' குறிப்பிட்ட சில தேவைகளுக்கே பயன்படுத்தப்பட்டுவருகிறது பிரயாணிகள் மச்சுவாயில் செல்வதால் 2 சதப்பயாணச்செலவு பத்து சதமாகின்றது.

மகாநாடு அடுத்த பெப்ரவரி மாதம் பாரிஸில் நடைபெறவிருக்கிறது.

இம்மகாநாட்டுக்கு வேலைவாய்ப்பு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி டாக்டர் எச். ஏ. டி. எஸ் குணசேகரா தலைமையிலான தூதுக்குழுஒன்று பாரிஸ் செல்லும். மகாநாட்டில் இக்குழு இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவைப்படும் பொருளாதார உதவிகள்பற்றி விளக்கிக் கூறும்.

இலங்கைக்கு உதவும் நாடுகள் குழுவில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, ஜப்பான், ஆஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகள் உள்ளன.

...

## முஸ்லிம் பாடசாலைகளுக்கு நற்சிந்தனை நூல்

கல்முனை, புதன்

முஸ்லிம் பாடசாலைகளில் பாடசாலை ஆரம்பத்தில் வாசிக்கக்கூடிய நற்சிந்தனை யடங்கிய புத்தகம் ஒன்றை தயாரித்து ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் இலவசமாக வழங்க அகில இலங்கை அரசினர் இஸ்லாமிய சங்க கிழக்கு மாகாணகிளை தீர்மானித்துள்ளது.

......

## ஒன்றுபட வேண்டுகோள்

கோட்டை, புதன்

முஸ்லிம்களின் மத உரிமையைப் பெறுவதற்காக சகல முஸ்லிம்களும் ஒன்றுபட்டுச் செயல்படவேண்டுமென்று அகில இலங்கை முஸ்லிம்லீக் வேண்டுகோள் விடுத்துள்ளது.

......

## நடனக்குழு

கோட்டை, புதன்

ஹங்கேரிய பாலே நடனகுழுஒன்று இலங்கை வருகிறது இக்குழு தேசிய சிறுவர் சேமநலக் கவுன்சில் நிதிக்காக கொழும்பு நவரங்கலை மண்டபத்தில் இம்மாதம் 18ம் 19ம் 20ம் திகதிகளில் நடனவிருந்தளிக்கும்

நத்தார் புதுவருட மலிவு விற்பனை
உங்களுக்கென புதிதாக வரவழைக்கப்பட்ட
வெலேனு, J. B., சின்டெக்ஸ் சூட்டிங்ஸ்
பல மலிவான விலைகளில் உண்டு
டயரும்ஸ்
54 — 60, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்யக் கோரிக்கை

## தமிழ்நாடு - கேரளம் முதல்வர்கள் வலியுறுத்து

## ராஜமான்யஒழிப்புரத்துஎதிரொலி

புதுடில்லி, டிச. 16

மன்னர்களின் சலுகைகளை ரத்துச்செய்து ஜனாதிபதி விடுத்த உத்தரவை சுப்ரீம் கோர்ட் ரத்துச் செய்திருப்பது, அரசியல் சட்டத்தில் தீவிரமாறுதல்கள் செய்யவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருப்பதாக தமிழ்நாடு-கேரள ராஜ்ய முதலமைச்சர்கள் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள்.

இந்திய சமஸ்தானாதிபதிகள் இதுவரை அனுபவித்து வந்த உரிமைகளையும் சலுகைகளையும் ரத்துச்செய்து இந்திய ஜனாதிபதி விடுத்திருந்த உத்தரவை எதிர்த்து இந்திய மன்னர்கள் 8 பேர் சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்திருந்தார்கள் இம்மனு மீதான தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது. 11 பேர் கொண்ட நீதிபதிகள் குழு இம்மனுவை விசாரித்தது. 8 பேர் ஜனாதிபதியின் கட்டளைக்கு எதிராகவும் மற்றவர்கள் ஆதரித்தும் தீர்ப்பளித்தனர். பெரும்பான்மை நீதிபதிகள் ஜனாதிபதியின் தீர்ப்பு செல்லுபடியாகாதெனத் தீர்ப்பளித்தார்கள். இந்திரா அரசுக்கு இது குறித்து மீண்டும் பிரச்னை ஏற்பட்டிருக்கின்றது.

ராஜமான்யத்தை ஒழிக்கவென இந்திரா அரசு முன்பு லோக சபையில் கொண்டு வந்த தீர்மானம் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. ஆனல் ராஜ்ய சபையில்

### பாடம் படிக்கலாம்

முன்னாள் அமைச்சர் திரு. எஸ். கே. பட்டேல் சுப்ரீம் கோர்ட்டின் இத்தீர்ப்புப் பற்றி கருத்துத் தெரிவிக்கையில், அரசாங்கம் பாடம் படித்துக்கொள்வதற்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது என்றார்.

உண்மையான ஜனநாயகம் தளிர்ப்பதை இது காட்டுகின்றது என்று முன்னாள் நிதி அமைச்சர் திரு. மொரார்ஜிதேசாய் கூறினார் இந்திரா காந்தி ராஜினாமாச் செய்யவேண்டுமென்று திரு. மிர்ஸா குறிப்பிட்டார். ஆனல் மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சி பிரமுகர்கள் நேர்மாறான கருத்தை வெளியிட்டார்கள்.

மக்கள் விருப்பம் நிறைவேற்றப்படவேண்டுமென்று அவர்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள்.

ராஜமான்யத்தை ஒழிப்பதற்கு புதிதாக ஒரு மசோதாவை இந்திரா அரசாங்கம் தயாரித்து ஆட்சி மன்றத்தில் தாக்கல் செய்யுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது ராஜமான்யத்தை ஒழிப்பதற்கு அரசாங்கம் அரசியல்சட்டத்திற்கிணங்க நடவடிக்கை எடுக்க உறுதி கொண்டிருக்கிறது என்று திருமதி காந்தி ஏற்கனவே அறிவித்திருக்கின்றார்

## பல்கலைக்கழக மாணவருக்கு உதவ கிராமசபை முடிவு

பருத்தித்துறை, புதன்

பேராதனை கொழும்பு. கட்டுபெத்த ஆகிய பல்கலைக் கழகங்களிற் படிக்கும் நெல்லியடிப் பட்டின சபை எல்லைக்குட்பட்ட ஏழைமாணவருக்கு உதவ நெல்லியடிப் பட்டின சபை முன்வந்துள்ளதாக மேற்படி சபைத் தலைவர் திரு. எஸ். பி. தேவசகாயம் அண்மையில் நடைபெற்ற சபைக் கூட்டத்தில் அறிவித்தார்.

மேலும் 5ம் வட்டார அங்கத்தவர் திரு ந கனகசுந்தரத்தின் பிரேரணையின்பேரில் நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்கு இரு தமிழ் பொலிசாரை தந்துதவவேண்டுமென ...

### பாகுபாடு காட்டப்படுகிறது

சுழிபுரம், புதன்

"தமிழ் பேசும் மக்களின் பொருளாதார முன்னேற்றத்துக்கு தடை போட்டும் கல்வி கற்பிப்பதில் பாகுபாடு காட்டியும் முடிவில் கலை கலாச்சாரத்துக்கும் தடை போடப்படுகிறது. இந்த நிலைமை மாறவேண்டும். தமிழ்மக்கள் சீரும் சிறப்புடனும் வாழவேண்டும் எமது பகுதி ஆட்சி எமது கையில் இருக்கவேண்டும். அப்போது தான் நாம் முன்னேற்றம் அடையலாம்

### 'நோபல் பரிசு இலக்கியத்துக்கு அல்லவாம்'

மாஸ்கோ, டிச. 6

ஸ்டொக்ஹோம்எழுத்தாளரும், சுவீடிஷ் அறிஞர்பேரவையின் உறுப்பினருமான அர்டூர் லுண்டிக்விஸ்ட், ஏ. ஷொலென்ஸடீனுக்கு நோபல் பரிசு வழங்கிய பேரவையின் முடிவு தவறானது என்றுதான் கருதுவதாகக்கூறினர்.

இத்தகைய முடிவுகள் இலக்கியத்துடன் எந்த விதத்திலும் சம்பந்தப்படாத மோதுதல்களுக்கே இட்டுச் செல்கிறது என்று அவர் 'அவ்டென் பிளாடட்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியின்போது சொன்னார். சோவியத் யூனியனின் விரோதிகள் சோவியத் விரோத உணர்வைத் தூண்ட இது உதவுகிறது என்றார்.

### ரஷ்யாவில் மதச் சுதந்திரம்

ஜோர்ஜ் டவுன், டிச. 16

சோவியத் யூனியனில் மதச் சுதந்திரத்துக்கு குழி பறிக்கப்படுவது என்ற துஷ்பிரச்சாரம் சோஷலிஸத்தின் எதிரிகளின் செயலாகும்.

கயானா நாட்டின் பிரதான முஸ்லிம் ஸ்தாபனத்தின் தலைவரான யாகூப் அலி ஆட்சிமன்ற உறுப்பினர் மத்தியில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார் அவர் அண்மையில் மேற்கொண்ட சோவியத் விஜயம் குறித்து பேசுகையில் இப்படி பிரஸ்தாபித்தார். இயங்கிவரும் மசூதிகளை கவனிப்பதற்கு சோவியத் அரசாங்கம் முஸ்லிம் ஸ்தாபனங்களுக்கு போதிய பண உதவி வழங்குகிறது என்று அவர் கூறினார்.

சோவியத் யூனியனுடனும் மற்றும் சோஷலிச நாடுகளுடனும் கயானா உறுதியாக ராஜதந்திர உறவுகளை

மைலாய் படுகொலை

## கிராமத்தையே அழிக்கும் படி மேலிடம் கட்டளையிட்டதாம்

போர்ட்பென்னில், (ஜியார்ஜியா) டிச. 16

மைலாய் கிராமத்தையும் அங்கிருந்த கிராமவாசிகள் அனைவரையும் ஒழித்துக் கட்டும்படி தங்களின் தளபதி கட்டளையிட்டதாக மைலாய் படுகொலை விசாரணையில் சாட்சியமளித்த மூன்று முன்னாள் சிப்பாய்கள் தெரிவித்தனர்.

லெப்டினன்ட் வில்லியம் கல்லியின் ராணுவ அணியில் தென்வியட்னாமில் பணிபுரிந்தவர்கள் இந்த மூவரும். கல்லி மீதான குற்றச்சாட்டுகளை விசாரித்துவரும் ராணுவ நீதிமன்றத்தில் சாட்சியமளித்தஇந்தமூவரில் ஒருவர் இன்னொரு விஷயத்தையும் வெளியிட்டார் பிராசிக்கியூசன்தரப்பில் முக்கியசாட்சியான ஒருவர் பாதுகாப்பற்ற சுமார் 50 வயது போன கிராமவாசிகளையும் பெண்களையும் குழந்தைகளையும் கொலை செய்ததாக இவர் தெரிவித்தார்

கல்லிஒரு சிவிலியன் பிரஜையைக்கூட கொலைசெய்வதைத்தாங்கள் பார்க்கவில்லையென்று அவர்கள் மூவரும் தெரிவித்தனர். வில்லியம் கல்லி மைலாய் கிராமத்தில் 102 கிராமவாசிகளைக் கொலை செய்ததாகவிசாரிக்கப்பட்டுவருகின்றார்.

இவர் தமது மேலதிகாரியின் உத்தரவின் பேரிலேயே நடந்து கொண்டுள்ளார் என்று நிருபிப்பதாக பிரதிவாதிகள் தரப்பில் இந்தமூன்று சாட்சிகளும் ஆஜர் செய்யப்பட்டனர். தளபதி ஒர்னஸ்ட் மெடினு, 1968 மார்ச் 15-ம் திகதி அந்தக்கிராமத்தையும் கிராமவாசிகளையும் நாசம் செய்யும்படி சொன்னதாக அவர்கள் மூவரும் கூறினர்கள்.

சார்ஜன்ட் எவ் ஜி பேகன் என்பவர் சாட்சியமளிக்கையில் 'எல்லாவியட்காங்கியரையும் சந்தேகநபர்களையும் கொல்லுங்கள் எல்லா வடவியட்னும் சிப்பாய்களையும் கொல்லுங்கள் உணவு கிடைக்கும் வழிகளையெல்லாம் தடைசெய்யுங்கள் எல்லாமிருகங்களையும்கொல்லுங்கள் கிராமத்தையே கொளுத்தித்தள்ளுங்கள், என்று உத்தர விட்டதாகச் சொன்னார். மைலாயில்தாம் எவரையும் கொலைசெய்யவில்லையென்று கூறியஅவர் தன்னைப் பொறுத்தவரை அங்குள்ள ஆண்கள், பெண்கள் குழந்தைகள் அனைவரும் எதிரிகளாகவே கருதப்பட்டனர் என்றார்.

தங்களின் சைனியம் சைகோனில் இருந்த பொழுது மைலாயிலுள்ள சகல வியட்னாமியரையும் கொலைசெய்யும்படி மேலிடத்திலிருந்து தங்களுக்கு கட்டளை பிறந்ததாகக் கூறினார்.

## நாஸிஸத்தை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றக் கோரிக்கை

நியூயோர்க், டிச 16

நாஜிஸத்தையும், இனவெறியையும் எதிர்த்து உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். இது பற்றிய ஐ. நா. சபை பொது அசெம்பிளியின் தீர்மானங்களை நிறைவேற்ற அங்கத்துவ நாடுகள் சட்டம் நிறைவேற்றி அமுல் படுத்த வேண்டும்.

இப்படியான ஒரு நகல் தீர்மானத்தை ஈராக்கும், போலந்தும், உக்ரேய்னும் ஐ. நா. சபையின்மூன்றாவது கமிட்டியின் பரிசீலனைக்கு சமர்ப்பித்துள்ளன.

சில நாடுகளில் நாஜிஸ, இனவெறிவாத கும்பல்கள் இயங்கி வருவது மனித உரிமைகளை மீறும் செயலாகும் என்று உக்ரேய்ன் பிரதிநிதி வி, கிராவெட்ஸ் கூறினார்

நாஜிஸம் மடிந்து விடவில்லை. தென். ரொடீஷியாவும், தென்னாபிரிக்காவும், போர்த்துக்கல்லும். கடைபிடிக்கும் கொள்கைகள் நாஜிஸத்தின் இன்றைய அவதாரமாகும் என்று பியலோ ரஷ்ய பிரதிநிதி எல். குத்ரியாவ்தீஸ்வா கூறினார்.

ஆக்கிரமித்த பிரதேசங்களில் இஸ்ரேல் நடத்தும் மிலேச்சத்தனமான அட்டூழியங்கள் நாஜிகளின் சக்ராதிபத்தியத்தின் கீழ் ஐரோப்பாவில் நடந்த மனித சங்காரத்தை ஞாபகப் படுத்துகின்றன என்று அவர்மேலும் கூறினார்.

செக்கோஸ்லோவாக்கியா ஹங்கேரி பிரதிநிதிகளும் இந்நகல் தீர்மானத்தை நிறைவேற்றும்படி கோரினர். (டாஸ்)

## அணு சக்தியிலிருந்தே

### 29 படகுகளை காணவில்லை

ரங்கூன், டிச 16

பர்மாவின் தென்கரையில் 29 மீன்பிடி படகுகள் காணமல் போய்விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் கடலில் மீன்பிடிக்கச் சென்ற இப்படகுகள் வழி தவறிப்போய் இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. இப்படகுகளைத்தேடி கப்பலொன்று கடலில் திரிகின்றது. ஆனல் இதுவரைக்கும் எதுவிதத் தடையமும் கிடைக்கவில்லையாம்.

### விமான சேவை தடைப்பட்டது

புதுடில்லி, டிச. 16

இந்தியாவிலிருந்து வெளி நாடுகளுக்கு மேற்கொள்ளப்படும் முக்கியமான நான்கு விமானச் சேவைகள் நேற்று ரத்துச்செய்யப்படவேண்டியேற்பட்டது.

இந்திய விமானிகள் மேற்கொண்ட வேலைநிறுத்தத்தின்போது இந்திய விமானப் படையைச் சேர்ந்த விமானிகள் பயன்படுத்தப்பட்டதை ஆட்சேபித்து இந்திய விமான சேவை ஊழியர்கள் நேற்று இரவு வேலைநிறுத்தம் செய்தனர். இதனல் லண்டன், டோக்கியோ, நைரோபி, நியுயோர்க் ஆகிய இடங்களுக்கு செல்லவேண்டிய விமானங்கள் புறப்படவில்லை.

......

### போர்த்துக்கலுடன் போட்டியிட மறுப்பு

மாஸ்கோ, டிச. 16

1970-ம் ஆண்டு சோவியத் கரபந்தாட்ட சாம்பியன்களும், மாஸ்கோ விமான நிறுவன கோஷ்டியும் போர்த்துக்கீஸ விளையாட்டுகோஷ்டியுடன் போட்டியிட மறுத்து விட்டனர். இது ஐரோப்பிய சாம்பியன் போட்டியில் நிகழ்ந்தது, இப்போட்டியில் 'ஸ்போட்ஸ்கிளப்-போத்துக்கல்' என்ற கோஷ்டி பங்கு பற்றுகிறது.

சுயாதிபத்தியம் வாய்ந்த நாடான கினிக்கு எதிராக போர்த்துக்கல் நடத்தும் ஆக்கிரமிப்பை எதிர்த்தே இப்பகிஷ்கரிப்பு நடந்தது.

......

### குறைந்தசெலவில் வீடுகள் அமைக்கப்படும்

கோட்டை, புதன்

குறைந்த செலவில் வீடு ...

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ராஜமான்யத்தை ஒழிக்க வென இந்திரா அரசு முன்பு லோக சபையில் கொண்டு வந்த தீர்மானம் பெரும் பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. ஆனால் ராஜ்ய சபையில் இது தாக்கல் செய்யப்பட்ட பொழுது பெரும்பான்மை கிடைத்தபோதிலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு ஒரு வாக்குக் குறைந்துவிட்டது. அதனால் மசோதா தோல்வியடைந்து விட்டது. என்றாலும் ராஜ மான்யத்தை ஒழித்தே ஆவது என்ற உறுதியுடன் இந்திய அரசு ஜனாதிபதிக்குள்ள விசேஷ அதிகாரத்தைப் பிரயோகித்து ராஜ மான்யத்தை ஒழிக்கும் உத்தரவைப் பிறப்பிக்கச்செய்தது. இந்த உத்தரவு ஜனநாகத்திற்கு விரோதமானதென்றும் சர்வாதிகரத்துக்கு வழிவகுக்குமென்றும் எதிர்க்கட்சிகள் குற்றஞ் சாட்டிவந்தன இந்த உத்தரவை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் மன்னர்கள் சார்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இவ் வழக்கின் தீர்ப்பு இப்பொழுது மீண்டும் நாட்டில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

ராஜமான்ய ஒழிப்பு சம்பந்தமாக சுப்ரீம் கோர்ட் வழங்கியுள்ள தீர்ப்பு அரசியல் சாஸனத்தில் தீவிர திருத்தங்கள் செய்யப்பட வேண்டியதை வலியுறுத்துவதாகவிருக்கின்றது என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதியும், கேரள முதலமைச்சர் திரு. அச்சுதமேனனும் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள்

பெரும்பான்மை மக்கள் விருப்பத்திற்கிணங்க ராஜமான்ய ஒழிப்பை அமுல் நடத்துவதற்கு அரசியல் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும் என்று திரு. அச்சுதமேனன் கூறியுள்ளார்.

## சென்னையில் ஆர்ப்பாட்டம்

ராஜமான்ய ஒழிப்புக்கு எதிரான சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை ஆட்சேபித்து நேற்று சென்னையில் ஊர்வலங்கள் நடத்தப்பட்டன. சமீபத்தில் சென்னையில் மாணவர் குழப்பம் ஏற்பட்டதைத் தொடர்ந்து ஊர்வலங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை இவர்கள் மீறியதால் சுமார் 100 தொண்டர்கள் கைதுசெய்யப்பட்டார்கள். இவர்கள் இந்திரா காங்கிரஸ் கட்சியையும் கம்யூனிஸ்ட் கட்சியையும் சேர்ந்தவர்கள்.

மேலும் 5ம் வட்டார அங்கத்தவர் திரு ந கனகசுந்தரத்தின் பிரேரணையின்பேரில் நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்கு இரு தமிழ் பொலிசாரை தந்துதவவேண்டுமென அரசாங்கத்தைக் கோருவதென்றும், கட்டாக்காலி நாய்களை ஒழிக்க வேண்டுமென்றும், பட்டின சபைச் சட்ட விடயங்களுக்காக வழக்கறிஞர் திரு மு. சிற்றம்பலத்தை நியமிப்பதென்றும். பாலருக்கான மொண்டிசோரிப் பாடசாலையொன்றை நிதிநிலைமை சீரடையும்போது நிறுவுவதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## ஆசிரியர்களுக்கு எச்சரிக்கை

கோட்டை, புதன்

கூட்டு முன்னணி அரசாங்கத்தின் சோஷலிஸ கல்விக் கொள்கைகளில் நாசவேலைகளைச் செய்ய முற்படும் பாடசாலை ஆசிரியர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவர் என்று பெருந்தொகையான ஆசிரியர்களின் கூட்டத்தில் பேசுகையில் உதவிக்கல்வி அமைச்சர் திரு பி.வை. துடாவே எச்சரிக்கை விடுத்துள்ளார்.

திரு. துடாவை மேலும் கூறியதாவது: மற்றும் அரசாங்க ஊழியர்களைப் போன்று ஆசிரியர்களும் தமது அரசியல் கொள்கைகளை வெளியிட உரிமை அளிக்கப்படுகின்றனர். ஆனால் அவர்கள் தமது உத்தியோக பூர்வ மான கடமைகளில் சலுகை செய்யப்படவில்லை என்பதை உறுதிப் படுத்துவதில் கவனம் செலுத்தவேண்டும். இன்றைய அரசாங்கத்தின் கல்விமுறை பற்றி விமர்சிக்க அவர்களுக்கு உரிமை அளிக்கப்பட்டுள்ளது என்றும் அழுத்தம் திருத்தமாக கூறினார்.

## திருமணத்திற்குச் சென்றவர்கள் ஆஸ்பத்திரியில்

எட்டியாந்தோட்டை, புதன்

இங்கு நடைபெற்ற ஒரு திருமணத்திற்கு வந்தவர்கள் திருமணம் முடிந்து வீடு திரும்புகையில் விபத்திற்குள்ளாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் பிரயாணம் செய்துகொண்டிருந்த பஸ் பாதையைவிட்டு விலகி 40 அடி பள்ளத்தில் விழுந்ததனால் இவ்விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

...நிலைமை மாறவேண்டும். தமிழ்மக்கள் சீரும் சிறப்புடனும் வாழவேண்டும் எமது பகுதி ஆட்சி எமது கையில் இருக்கவேண்டும். அப்போது தான் நாம் முன்னேற்றம் அடையலாம் இதை அடைய ஓர் அணியில் எல்லோரும் ஒன்றுபட வேண்டும்.''

இவ்வாறு வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழரசுக் கட்சி புதிய செயலகத் திறப்புவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழரசுக்கட்சி பொதுச் செயலாளர் திரு. அ அமிர்தலிங்கம் குறிப்பிட்டார். சித்தன்கேணிச் சந்திக்கு அருகாமையிலுள்ள கட்டிடத்திலுள்ள செயலகத்தை திரு. எம். அருணாசலம் குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார்

## சேலையில் தீப்பிடித்ததால் பெண் மரணம்

யாழ்ப்பாணம், வியா

இராமநாதபுரத்தைச் சேர்ந்த அருச்சுணன் பாறுபதி(45) என்னும் பெண் சேலையில் நெருப்புப்பிடித்து கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

கிளிநொச்சி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு' மு. யோகலிங்கம் ஜே பி விசாரணை நடத்தினார் விசாரணையின் பொழுது இறந்தவரின் மகன் கருணவதி சாட்சியமளிக்கையில், தாய் தேநீர் வைப்பதற்காக கைவிளக்கை எடுக்கும் பொழுது கைதவறி விளக்குக்கீழே விழுந்ததினால் அவரது சேலையில் தீப்பிடித்தது எனக் கூறினார்.

விபத்தால் ஏற்பட்ட மரணமென திடீர் மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

## இளம்பெண் தற்கொலை

கோட்டை, புதன்

சினிமா பார்க்கப்புறப்பட்டுக் கொண்டிருந்த ஏ. கருணவதி என்ற இளம்பெண் அவரது தந்தையார் தடுத்ததினால் நஞ்சருந்தித் தற்கொலை செய்துகொண்டாராம்.

இப்பரிதாப சம்பவம் மீகாதன்னையில் நடந்துள்ளது.

சுழிபுரம், புதன்

சுழிபுரம் கிராமசபை மின்சார வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வலிசாமம் மேற்கு கூட்டுறவு தொழிலாளர் சங்கத்தினர் மின்சார ஒப்பந்த வேலைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

...உதவி வழங்குகிறது என்று அவர் கூறினார்.

சோவியத் யூனியனுடனும் மற்றும் சோஸலிஸ நாடுகளுடனும் யாழ் உடனடியாக ராஜதந்திர உறவுகளை ஸ்தாபித்துக் கொள்வது அவசியம் என்று அவர் மேலும் கூறினார்

## மாலேதீவில் சோவியத்தூதுவர்

மாலே (மாலேதீவு), டிச 16

இலங்கையிலுள்ள சோவியத் ஸ்தானிகர் ரஃபீக் நிஷானேவ் மாலேதீவு ஜனாதிபதி இப்ருஹிம் முஹம்மத் நஸீரிடம் நியமனப்பத்திரத்தை இங்கு சமர்ப்பித்தார்.

நிஷானேவ் மாலேதீவுக்கும் சோவியத் ஸ்தானிகராக கடமையாற்றுவார்.

சோவியத் யூனியன் மக்களிடையே சமாதானத்தையும், நட்புறவையும், ஒத்துழைப்பையும் பலப்படுத்தும் கொள்கையை கடைப்பிடிக்கிறதென்று நிஷானேவ் கூறினார்.

ஜனாதிபதி நஸீர் பேசுகையில், பரஸ்பரம் மரியாதை அடிப்படையில் மாலேதீவு சோவியத் யூனியனுடன் நட்பை வளர்க்கும் என்று கூறினார்.

## எரிவாய்வு குழாய் அமைக்க ஒப்பந்தம்

காபூல், டிச. 16

ஆப்கான் எல்லையிலுள்ள அமு-தல்யா நதிக்கு மேலாக ஒரு எரிவாய்வு குழாய் வழியை நிர்மாணிப்பதற்கான உடன்படிக்கை ஆப்கானிஸ்தானுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்டது.

வீனஸ் 7

## மெதுவாக தரையிறங்கியது

மாஸ்கோ, டிச. 16

சோவியத் யூனியன் வெள்ளிக்கிரகத்துக்கு அனுப்பிய ஆளில்லாத கிரகம் வீனஸ்-7 அங்கு மெதுவாகத் தரையிறங்கியிருப்பதாகவும் பூமிக்கு வெள்ளிக்கிரகம் பற்றிய தகவல்களை அனுப்பத் தொடங்கி விட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது 120 நாட்களில் வெள்ளிக்கிரகத்தைச் சென்றடைந்துள்ள இக்கலம் அக்கிரகத்தின் வாயுத்தன்மை மற்றும் காலநிலை போன்றவற்றை பூமிக்கு அறிவிக்கும்.

...சமர்ப்பித்துள்ளன.

# அணு சக்தியிலிருந்தே இலங்கையும் மின்சாரம் பெறும்

## பிரிட்டிஷ் விஞ்ஞானி ஹேஜ்யம்

லண்டன், டிச 16

அணுசக்தியிலிருந்து மின்சாரம் பெறவேண்டிய நிலைமை இலங்கைக்கும் ஏற்படுமாம். பிரபல பிரிட்டிஷ் விஞ்ஞானி இப்படி கூறியிருக்கிறார்.

பிரிட்டனின் முன்னணி விஞ்ஞானிகளில் ஒருவரான டாக்டர் தோமஸ் எட்வேட் அல்போன் தற்சமயம் இலங்கை வந்துள்ளார். பிரிட்டனின் மின்சார உற்பத்திசபையின் பிரதான விஞ்ஞானியாகவிருந்து சமீபத்தில் இளைப்பாறிய இவர் இலங்கை விஞ்ஞான அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த மகாநாட்டில் பங்கு பற்றுவார்.

பிரிட்டிஷ் மத்திய மின்சார உற்பத்திசபைக்கு தற்சமயம் ஆலோசகராகக் கடமையாற்றிவரும் டாக்டர் அலிபோன் லீட் சர்வகலாசாலையில் மின்சாரப் பொறியியல் பேராசிரியராகவும் பணியாற்றுகிறார். 2000-ம் ஆண்டில் உலகத்தின் மின்சக்தி தேவைகள் குறித்து இம் மகாநாட்டில் தாம் பேசவிருப்பதாக அவர் இலங்கைக்கு புறப்படுவதற்கு முன்னர் லண்டனில் கூறினார்.

''இந் நூற்றூண்டு முடிவடையும் கட்டத்தில் பல நாடுகள் விசையாற்றல் சக்திக்கு பெரும் தட்டுப்பாட்டை எதிர்நோக்க வேண்டியிருக்கும். கைத்தொழில்துறையை விருத்தி செய்ய விசையாற்றல் சக்தி தேவையாதலால் வறிய நாடுகளே இத் தட்டுப்பாட்டினால் பாதிக்கப்படும் நிலையில் உள்ளன. எண்ணெயும் நிலக்கரியும் காலப்போக்கில் குறைந்துபோகும். ஆகவே மின்சாரம் வாயிலாகவே இந்நாடுகள் சக்தியைப்பெற வேண்டுமென்பதில் ஐயமில்லை'' என்று டாக்டர் அல்போன் கூறினார்,

இந்நூற்றூண்டு முடிவில் இலங்கையும் தனது கைத்தொழில் தேவைகளுக்கு சக்தியை நாடவேண்டிவரு மெனக் கூறிய அவர் ஏனைய நாடுகளைப் போன்று இலங்கையும் அணுசக்தி மூலம் மின்சக்தியைப் பெற நடவடிக்கை எடுக்கும் என்றார். அணுசக்தி வாயிலாக மின்சக்தியைப் பெறுவதில் பிரிட்டன் முன்னணி வகிக்கிறதென்றும் பூரணமாக கட்டப்பட்ட அணுப் பொறிகளை பிரிட்டனிடமிருந்து அப்படியே இந்நாடுகள் வாங்கிக்கொள்ளலாமென்றும் அவர் தொடர்ந்து கூறினார்.

டாக்டர் அலிபோன் இதுவே முதல் தடவையாக இலங்கைக்கு விஜயம் செய்கிறார். இலங்கை விஞ்ஞான அபிவிருத்திச் சங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் பற்றி படித்தறிய விருப்பம் கொண்டிருக்கும் அவர் இலங்கை பற்றியும் அறிய ஆவல் கொண்டிருக்கிறார்.

## சந்தேகநபர் றிமாண்டில்

முல்லைத்தீவு, புதன்

முல்லைத்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கிவரும் பெட்ரோல் நிரப்பு நிலையத்தில் நேற்றிரவு பணம் களவு போய்விட்டதாக முல்லைத்தீவுப் பொலிசாருக்கிக்கிடைத்த புகாரைத் தொடர்ந்து முல்லைத்தீவு வண்ணான்குளம் றோட்டைச் சேர்ந்த எஸ். எம். முத்துராசா என்பவரைச் சந்தேகத்தில் கைது செய்தனர். அவரிடமிருந்த பணமும் கைப்பற்றப்பட்டதாகத்தெரிகிறது, முல்லைதீவு நீதிபதி திரு. எம் பி.ஜீ. திசநாயக்கா முன்னிலையில் அவர் ஆஜர் செய்யப்பட்டார். நீதிபதி சந்தேக நபரை இம்மாதம் 29-ம் திகதிவரை றிமாண்டில் வைக்க உத்தரவிட்டார்.

## கல்விமந்திரி பூரணசுகம்

கொழும்பு, புதன்

கடந்த ஒருமாதகாலமாக கொழும்பு பெரியாஸ்பத்திரி மேர்ச்சன்ட் வார்டில் சுகவீனமுற்றிருந்த கல்வி அமைச்சர் ஜனாப் பதியுதீன் மஹ்முத் பூரணசுகம்பெற்று வீடு திரும்பியுள்ளார்.

## புலோலி கி. ச. தேர்தல்

புலோலி, புதன்

புலோலி கிராமசபையின் 14 வட்டாரங்களுக்குமான தேர்தல் இம்மாதம் 30-ந் திகதி நடைபெறும் என தேர்தல் உதவி உத்தியோகத்தர் அறிவித்துள்ளார்

14 வட்டாரங்களிலும் 32 பேர் போட்டியிடுகின்றனர். கடந்த 4-ந் திகதி இத்தேர்தல் நடைபெறுமெனமுன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலும் இம்முறை சிலர் போட்டியிடுகின்றனர்.

## 17 பேர் போட்டி

யாழ்ப்பாணம், வியா

யாழ்ப்பாணம் கந்தோரில் தபால் கந்தோர் பொறியியலாளர் பகுதி மதி உரைக் குழுவுகான நியமனங்கள் மாவட்ட பொறியியலாளர் திரு. சி கந்தசாமியிடம் சமர்ப்பிக்கப்பட்டன:

உறுப்பினர்களைக் கொண்ட இக்குழுவிற்கு 17 பேர் போட்டியிடுகின்றனர். இக்குழுத் தேர்தல் இம்மாதம் 22-ந்தேதி நடைபெறும்,

## ஹோர்லிக்ஸ் டிசம்பர் 31-க்குப் பின் கிடையாது

கோட்டை, புதன்

இம்மாதம் 31-ம் திகதியிலிருந்து ஹோர்லிக்ஸ், நெஸ்ரமோல்ற் போன்ற பால் மாக்கள் இறக்குமதி செய்யப்படமாட்டாது. அவற்றுக்குப் பதிலாக 'மோல்ரட் மில்க்' என்ற பெயரில் ஒரு சாதிமாவை இலங்கையிலேயே தயாரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது

வருகிற ஆண்டு ஜனவரி மாதம் முதல் பல்மா விநியோகத்தை கூட்டுறவு இலாகா எடுத்து நடத்த விருப்பதாகவும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இவை விநியோகிக்கப்படும் என்றும் அரசாங்கம் நேற்றுத் தெரிவித்தது.

## வீடுகள் அமைக்கப்படும்

கோட்டை, புதன்

குறைந்த செலவில் வீடுகளை அமைக்கும் திட்டமொன்றை வீடமைப்பு அமைச்சு தயாரித்துள்ளதாக வீடமைப்பு அமைச்சர் திரு. பீட்டர்கெனமன் இன்று தெரிவித்தார்.

குறைந்தது 400 சதுர அடி கொண்ட வீடொன்றை அமைக்க ரூபா 3300 க்கும் 3500 க்கும் இடைப்பட்ட தொகையே செலவாகும் என்றும் கூறிய அமைச்சர் இவ்வீடுகளை முடிக்குரிய வெறுங்காணிகளிலேயே அமைக்க விருப்பதாகவும். இதற்கான புதிய காணிகளை கொள்முதல் செய்ய அரசாங்கம் முன்வராதென்றும் கூறினார்.

சேரி வாசிகளுக்கு வசதியான வீடுகள் அமைத்துக் கொடுக்க முடிவுசெய்துள்ளதாகவும் தெரிவித்தார்

## குருத்துவ அபிஷேகம்

பண்டத்தரிப்பு, புதன்

சூராவத்தையைச் சேர்ந்த வண. சகோ. எஸ். யேசுதபொன்கலம் துரைசிங்கம் யாழ் ஆசனக் கோவிலில் 21-ம் திகதி யாழ். துணை ஆயர் வந். அன்ரனி ஆண்டகையினர் குருத்துவ அபிஷேகம் பெறவுள்ளார்.

நாவலப்பிட்டியைச் சேர்ந்த சங் சகோ. எட்மன் முருகுப் பிள்ளையும் இம் மாதம் 19-ம் திகதி ரோமில் குருத்துவ அபிஷேகம் பெறுவார். இதனையிட்டு மருதானை புனித பாத்திமா ஆலயத்தில் நன்றித்திருப்பலி அன்று ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

## சீமெந்து தட்டுப்பாடு நீங்கியது

மாவிட்டபுரம், புதன்

காங்கேசன் சீமெந்து தொழிற்சாலையில் கடந்த சில வாரங்களாக மின்சார தட்டுப்பாட்டால் ஒரு சூளை இயங்கவில்லை. அதனால் சீமெந்து தட்டுப்பாடு ஏற்பட்டு அரசாங்க கொந்தராத்துகாரர்களுக்கும் பலநோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு மட்டுமே சீமெந்து வழங்கப்பட்டது.

தற்போது மின்தட்டுப்பாடு நீங்கியுள்ளதால்போதுமான அளவு சீமெந்து பாவனையாளர்களுக்கு கிடைக்கவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பகைவர், அயலோர், நட்பினர் என்னும் இம் மூவகையோரிடத்தும், தருமத்தின் வழுவாமல் ஒப்ப நிற்றல் நடுநிலைமை எனப்படும்.

— நாவலர்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna;
Post Box: 49, Jaffna; Telephone: 889.

சௌம்ய வருஷம் மார்கழி மாதம் 2-ந் திகதி (17-12-70)


## புதிய நம்பிக்கை

பாகிஸ்தானில் முதல் முதலாக ஜனநாயக முறையிலே வெற்றிகரமாக பொதுத்தேர்தல் நடந்து முடிந்தது. பொதுமக்கள் தீர்ப்பளித்து விட்டார்கள். இனி அங்கு ஜனநாயகஆட்சி நடைபெறுமா? அல்லது மீண்டும் இராணுவ ஆட்சிதானா? இக் கேள்விக்கான பதிலை இப்போது யாரும் திட்டமாகக் கூறுவதற்கில்லை என்றாலும் நல்ல பலனே ஏற்படுமென்று நம்ப அதிக இடமுண்டு.

தேர்தல் முடிவின்படி முன்னூறு பேரடங்கிய பாக் தேசியசபையில் அவாமிலீக் தலைவரான ஷேக் முஜிபுர் ரஹ்மானுக்கு நூற்றிஐம்பத்திரண்டு பெரும்பான்மை ஸ்தானங்கள் கிடைத்துள்ளன. ஆகவே தமது கட்சியின் தேர்தல் அறிக்கையின் படியே பாகிஸ்தானின் புதிய அரசியல் அமைப்பு இருக்க வேண்டுமென்று அவர் டாக்காவில் தெரிவித்தார். அதாவது பாதுகாப்பு, வெளிநாட்டு உறவு இவைகளை மட்டும் தலைமை அரசாங்கம் பார்த்துக்கொள்ளவேண்டும். மற்றப்படி பூரண பிரதேச சுயாட்சி மாகாணங்களுக்கு இருக்கவேண்டும். மேற்குப் பாகிஸ்தானியர் பழைய வேற்றுமைகளை மறந்து அவர்களது வங்காளி சகோதரர்களுடன் ஒத்துழைத்து மேலான லட்சியத்தை நோக்கி முன்னேறவேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

மேற்குப் பாகிஸ்தானில் நூற்றிமுப்பது ஸ்தானங்களில் எண்பத்தொரு ஸ்தானங்கள் பெற்றுள்ள மக்கள் கட்சித் தலைவர் புட்டோ மக்களுக்கு அடிப்படை உரிமைகளை அளிக்கும் அரசியல்திட்டத்தைத் தயாரிப்பதில், கிழக்குப் பாகிஸ்தான் தலைவர்களுடன் ஒத்துழைக்கத் தயார் என்று அறிவித்திருக்கிறார். "சுரண்டிருார், "புதிய அரசியல் அமைப்பு பாகிஸ்தானின் இஸ்லாமிய அடிப்படையைப் பாதுகாக்கவேண்டும். எல்லாப் பகுதிகளுக்கும் நீதி வழங்கவேண்டும் அவாமிலீக் கேட்கும் பூரணசுயாட்சி, பாகிஸ்தானை இரு கூறுகளாக்கி, பின்னர் ஐந்து பாகிஸ்தான்களாக்கி விடக்கூடும்" என்று ஒருபுறம் எச்சரித்துள்ளார்.

மக்கள் கட்சித் தலைவர் திரு. புட்டோவோ இந்தியாவை பாகிஸ்தானின் விசேஷ விரோதியாகக் கருதி அதன் மீது "புனிதப்போர்" தொடுக்கவேண்டுமென்ற கொள்கையைப் பின்பற்றுகையில் அவாமி கட்சித் தலைவர் ஷேக் ரகுமான், இந்தியா — பாக். உறவுகளை படிப்படியாக சீர்செய்ய வேண்டுமென்றும் அமெரிக்கா, ரஷ்யா இவற்றுடன் சுமுகமான உறவுகளைக் கொள்ளவேண்டுமென்றும் கருதுகிறார்.

இன்று பாகிஸ்தானின் தேசிய வருமானத்தில் 100-க்கு 60 வீதம் ராணுவத்திற்குச் செலவாகிறது. இதில் பெரும் பகுதி மக்களின் சமூக சேவைகளுக்குப் பயன்பட்டாலே மக்களின் கஷ்டங்கள் குறையவும் அவர்கள் முன்னேறவும் முடியும். இது இரு முக்கிய கட்சித் தலைவர்களுக்கும் தெரியாததல்ல. இந்தியாவுடன் உள்ள பல பிரச்னைகளையும் அமைதியான முறையில் தீர்த்துக்கொள்ள முன்னைவிட இப்போது அதிக அவசியமும் வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது.

இவ்விரு கட்சித்தலைவர்களும் ஒரு பொதுவான அரசியல் திட்டத்தைத் தயாரித்தால், அதைத் தலைவர் யாஹ்யாகான் அனுவசியமாகத் தடுக்க முற்படமாட்டாரென்றே கொள்ளலாம். பாகிஸ்

# எல்லா மாணவருக்கும் பாரபட்சமின்றி நீதி வழங்க வழி என்ன?

கல்வி அமைச்சரின் நிலைமை சற்றும் சுலபமல்ல. தமிழ் பேசும் அமைச்சரான பதியுதீன் முகம்மது, தமிழ் பேசும் மக்களுக்கு வேண்டுமென்றே தீங்கெதுவும் செய்ய முற்பட நியாயமில்லை. மேலும் இந்நாட்டில் முஸ்லீம்களும் தமிழ் பேசும் மக்களாகையால், தமிழ் மூலம் கல்வி கற்பவர்களுக்கு விசேஷ நிபந்தனையை போடுவது முஸ்லீம் சமூகத்தையும் பாதிப்பதாகும். ஆகவே "தரப்படுத்தல்" எனும் முறையை அவர் கையாளவேண்டி ஏற்பட்ட காரணங்களை தெளிவாக ஆராய்ந்து, இப்பிரச்னையை நல்ல முறையில் தீர்க்க வழி வகுப்பது இன்று மிக முக்கியமான தேசியப் பணியாகும்.

பல்கலைக்கழகத்தில் மாணவ மாணவிகளை சேர்த்துக் கொள்வது சம்பந்தமாக கல்வி அமைச்சு கையாண்ட 'தரப்படுத்தல்' முறையை விளக்கி, தகவல் இலாகா ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறது. இந்த அறிக்கையை ஆராயுமுன், இவ்வாண்டில் அவசரமாக இம்முறையைக்கையாளவேண்டி ஏற்பட்ட காரணங்களை கவனிக்க வேண்டும் பல்கலைக்கழக பொறியியல் வகுப்புகளில் சேருவதற்கான பரீட்சைகளில் தமிழ் மாணவர்கள் மிகக் கூடுதலாகத் தேறியுள்ளதாக ஒரு கொழும்புப் பத்திரிகை வகுப்புவாதத்தைக் கிளப்பிவிடும் முறையில் ஒரு செய்தியை முன் பக்கத்தில் வெளியிட்டது. அந்த வகுப்புவாத விஷவித்து முளைத்து, பல விபரீதங்களைச் செய்யப் போகிறதென்று அஞ்சப்பட்டது. அவ்விதமே காரியங்கள் நடக்கின்றன. இது பெரிய துரதிஷ்டமாகும். பரீட்சையில் தேறிய மாணவர்கள் எந்த வகுப்பை, சமூகத்தைச் சேர்ந்தவர் என்று ஒரு பத்திரிகை வெளியிட வேண்டிய அவசியமோ, நியாயமோ என்ன? தமிழ் மாணவர்கள் இம்முறை அதிகமானோர் தேறியிருக்கலாம். அப்படித் தேறியது அம்மாணவர்களின் குற்றமா? அப்பத்திரிகை கிளப்பிய பிரச்னையால் இதுபற்றி விசாரணையும் நடைபெற்றது. ஒழுங்கீனங்கள் எதுவும் நடைபெறவில்லை என்று அந்த விசாரணை சபையும் அறிவித்தது. என்றாலும் அத்துடன் இவ்விஷயம் முடியவில்லை. அம்கமான சிங்கள மாணவர்களை பல்கலைக் கழகத்தில் சேர்க்க அமைச்சர் புது முறைகளைக் கையாள வேண்டிய அரசியல் அவசியம் ஏற்படலாயிற்று. அதன் பயனே இந்தத் 'தரப்படுத்தல்' முறையாகும்.

தகவல் இலாகா வெளியிட்டுள்ள அறிக்கையின்படி சிங்கள மொழிமூலம் கல்வி கற்ற மாணவர்களைவிட, தமிழ் மொழிமூலம் கல்வி கற்ற மாணவர்கள் அதிகமான புள்ளிகள் பெற்றிருந்தாலே, பல்கலைக்கழகத்தில் சேர்ந்துக் கொள்ளப்படுவர் என்ற முறையே 'தரப்படுத்தல்' என்ற பெயரில் கையாளப் பட்டுள்ளதாகத் தெரிகிறது. இது பாரபட்சமானதென்பது வெளிப்படை. என்றாலும் சிங்களத்திலே விஞ்ஞானக் கல்வி கற்பிக்க ஆசிரியர்கள் அதிகமில்லை என்றும், அதிகமான சிங்களமொழி ஆசிரியர்களைப் பெறவே, அம்மொழி விஷயத்தில் இந்தச் சலுகை அளிக்க நேரிட்டதாகவும்

**பராசரன்**

காரணம் கூறப்படுகின்றது. காரணம் எதுவாயினும் இலங்கை மாணவர்களிடையே இவ்வித வேற்றுமையான, பாரபட்சமான முறையைக் கையாளுவது நியாயமென்றோ தேசீய ஒற்றுமையை பலப்படுத்துமென்றோ, யாரும் கூறமாட்டார்கள். உண்மையில் அப்பத்திரிகை இவ்விஷயமாக வகுப்புவாதத்தைக் கிளப்பியிராவிட்டால், இச்சமயம் கல்வி அமைச்சர் இச் சங்கடங்களை விலைக்கு வாங்கி இருப்பாரா?

இனி என்ன? இந்த பாரபட்ச வேற்றுமைகள் நீடிக்க வேண்டியதுதானா? இந்நாட்டிலே எல்லாப் பகுதி மாணவர்களுக்கும் சமவசதிகள் ஏற்படவும் திறமைக்கு உரிய இடம் கிடைக்கவும் செய்ய நல்லவழி ஏதும் உண்டா? தமிழ் மாணவர்களின் புண்பட்ட உள்ளங்களை ஆற்றவும் அவர்கள் விஷயமாக வேற்றுமைகள் காட்டாமலேயே, மற்றப் பகுதி மாணவர்களுக்கு சம சந்தர்ப்பங்கள் அளிக்கவும் வழி உண்டா? இதைப் பற்றி ஆராய்ந்து தக்க முடிவுகளை வகுப்புவாதக் கண்ணுடன் இன்றி தேசியக் கண்ணுடனே செய்வது தான் அவசரமும் அவசியமுமாகும்.

கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள விளக்கத்தின்படி, சிங்கள மூலம் கல்வி கற்றவர்கள் இலங்கையில் 4 பல்கலைக் கழகங்களில் சேரலாம். ஆனால் தமிழ்மூலம் கற்றவர்களுக்கு இரண்டு தான் உண்டு. அதுவும் தபால் அமைச்சரின் முயற்சியாலேயே கொழும்பு பல்கலைக்கழகத் தடை நீங்கியதாம். வித்யாலங்கார, வித்யோதய பல்கலைக் கழகங்களில் சிங்கள மொழிமூலம் மட்டுமே விஞ்ஞானக் கல்வி கற்பிக்கப்படுவதால அம்மொழி மூலம் விஞ்ஞானக்கல்வி கற்பிக்க இனி தேவையான ஆசிரியர்கள் கிடைக்க முடியும்.

இதற்காக தமிழ்மொழி மூலம் கற்பவர்களுக்கு பாரபட்சம் காட்டவேண்டிய அவசியமிருக்கத் தேவையில்லை.

இலவசக் கல்வி, தாய் மொழிமூலம் கல்வி இக்காரணங்களால், அதிகமான மாணவர்கள் தகுதிபெற்று உயர்கல்வி படிக்கமுன்வருகிறார்கள், ஆனால் பல்கலைக் கழகங்களில் அவர்களை எல்லாம் சேர்த்துக்கொள்ள இடமில்லை. இடமில்லாத காரணத்தால், 'தரப்படுத்தல்' முதலிய அசாதாரண முறைகளைக் கையாள வேண்டி ஏற்பட்டுள்ளது. தலைக்குத்தகுந்த குல்லாயைத் தைப்பதை விட்டு, குல்லாய்க்குத் தகுந்தபடி தலையைவெட்டும் முறை கையாளப்படுகின்றது! வடக்கிலும் கிழக்கிலும், சிம்மாசனப்பிரசங்கத்தில் குறிப்பிட்டதுபோல், இரு புதிய பல்கலைக்கழகங்களை ஆரம்பிப்பதுதான் இந்தப் பிரச்னை சுமுகமாகத்தீர வழியாகும். சிம்மாசனப்பிரசங்கத்தில் அறிவித்த அந்த யோசனையை அரசாங்கம் எப்போது அமுல்செய்யப் போகின்றது? இதுபற்றி இனியும் அசமந்தமாக இருக்கமுடியாது

புதிய பல்கலைக்கழகங்களை ஏற்படுத்துவதில் சற்றே தவக்கமேற்படுமாயின், மற்றோர் முறையை அரசாங்கம் கையாளலாம். வடக்கிலும் கிழக்கிலும் பல முதல்தரமான கல்லூரிகள் உண்டு. அவற்றில் சிலவற்றைத் தெரிவுசெய்து, இலங்கை பல்கலைக்கழகத்துடன் அவற்றை இணைத்து மாணவர்களை அவற்றில் சேர்த்து உயர்கல்வி கற்பித்து பின்னர் வசதியாகத் தனிப் பல்கலைக்கழகங்கள் அமைக்கலாம் பல்கலைக்கழகப்படிப்புக்கு அதிகமானஇடம்செய்வதாயின், இந்தக்கல்விப் பிரச்னை பெரிதும் குறைவதாக இருக்கும்.

இன்று இலங்கையிலே நான்கு பல்கலைக்கழகங்களிலுள்ள விஞ்ஞானத்துக்கான இடங்களில் பாதியை நாட்டுப்புற மாணவர்களுக்கும், மறுபாதியை நகர்ப்புறமாணவர்க்குமாக இனி ஒதுக்கலாமென்றும் இதனால் நாட்டுப்புற மாணவர் முன்னேறவும் அவர்களுக்கு நியாயம் வழங்கவும் முடியுமென்றும் சொல்லப்படுகின்றது. எல்லாருக்கும் வாய்ப்பளிக்க வேண்டியதே ஆனால் விஞ்ஞானம் படித்து பட்டம் பெற்றவர்களிலும் பலர் இன்று வேலையின்றித் தவிக்கிறார்கள். இந்தியாவிலே பல்லாயிரக்கணக்கான இஞ்சினியருக்கு வேலையில்லை, இங்கு டாக்டர்களுக்கு அநேகமாக அதேநிலை. இதைப்பார்க்கையில், எந்த விஞ்ஞான மாணவர்களுக்கும் தங்கள் எதிர்காலம் பற்றி உற்சாகமிருக்கமுடியுமா? இக்கல்விமுறையை நம்நாட்டுக்குத் தேவையான முறையில் அடியோடுமாற்றி அமைக்கவேண்டும். அதற்கிடையே ஓர் அன்பர் கூறுவதுபோல், நாட்டுப்புற மாணவர்களில் திறமைசாலிகளுக்கு விசேஷ சலுகையும், ஸ்காலர்ஜிப்புகளும் அளித்து, உயர்தர விஞ்ஞானக்கல்வி பயில வாய்ப்பளிக்கலாம். இது மனிதர்களைப்பற்றியமிகச்சிக்கலான பிரச்னை. மனிதாபிமானத்துடன், பாரபட்சமின்றி நாட்டுநன்மைக்கான முறையில் தீர்க்கமுற்படவேண்டும். பிடிவாதமின்றி மிக நிதானமாகவும் தீர்க்க தரிசனத்துடனும் காரியங்கள் செய்தால், இது சுமுகமாகத்தீர நிச்சயம் வழியுண்டு.

# சமஷ்டிக் குடியரசில் மக்கள் சபையும் மாநிலங்கள் சபையும்

**இலங்கை ஆட்சி மன்றம் எப்படி அமைய வேண்டுமென்பதை இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி, அரசியல் அமைப்பு விவகார அமைச்சுக்குச் சமர்ப்பித்துள்ள தங்கள் அறிக்கையில் தெரிவித்திருக்கிறது. அதன் விபரம் இங்கு தரப்படுகின்றது.**

பகுதி IX

**சட்டமன்றம்:**

76. இலங்கைப் பாராளுமன்றமானது-

(அ) ஜனாதிபதி;

[ஆ] மக்கள்சபை;

[இ] மாநிலங்கள்சபை

என்பனவாய உறுப்புகளை கொண்டிருத்தல் வேண்டும்.

77. மக்கள்சபையானது 78ஆம், 79ம் உறுப்புரைகளுக்கேற்பஉருவாக்கப்பட்ட வெவ்வேறு தேர்தற்றொகுதிகளின் வாக்காளரினால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களைக்கொண்டிருத்தல் வேண்டும்.

78. ஒரு தொகுதி நிர்ணய ஆணைக்குழுவானது, பின்வருமடிப்படையில் நிச்சயிக்கப்பட்ட பல்வேறு தேர்தற்

உறுப்பினர்களையும் கொண்டவொரு தேர்தல் வாக்காண்மைக் குழாத்தினால் தெரிவுசெய்யப்பட்ட பத்து உறுப்பினர்கள் ஒவ்வொரு மாநிலத்தினின்றும் தெரிவு செய்யப்படல்வேண்டும்.

83. மாநிலங்கள் சபை ஆறாண்டுகாலத்திற்குதெரிவு செய்யப்படல்வேண்டும்என்பதுடன், அதற்குமுன்னர் கலைதல் அல்லது கலைக்கப்படல் ஆகாது.

[illegible] உறுப்புரிமைக்கும் மாநிலங்களின் [illegible]

ராவர் தலைமைதாங்கப்பட்டிருப்பதாகக் கருதப்படல் வேண்டும்.

90. இவ்வரசியலமைப்புத்திட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கமைய, 86 அ), (ஆ), (ஈ) என்னும் உறுப்

96. மக்கள்சபையினால்மூனையப்பட்ட ஒரு சட்டமூலமானது, அச்சபையில் இரண்டாம் வாசிப்பில் நிறைவேற்

101. மாநிலங்கள்சபையினால் முனையப்பட்டவொரு சட்டமூலமானதுஅச்சபையிலேயே எல்லா நிலைகளிலும் பரிசீலிக்கப்படல்வேண்டும்; அச்சட்டமூலம் அச்

## ஜப்பானுக்கு 47 தங்கப்பதக்கம்

பாங்கொக், டிச 15

பாங்கொக்கில் நடைபெறும் ஆசிய விளையாட்டு விழாவில்இதுவரை ஜப்பான் 47 தங்கப்பதக்கங்களையும் இந்தியா 5 தங்கப்பதக்கங்களையும் இலங்கை 2 தங்கப் பதக்கங்களையும் பெற்றுள்ளன.

......

## 'பாடசாலைகளில் அரசியல் வேண்டாம்'

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

படை உரிமைகளை அளிக்கும் அரசியல்திட்டத்தைத் தயாரிப்பதில், கிழக்குப் பாகிஸ்தான் தலைவர்களுடன் ஒத்துழைக்கத் தயார் என்று அறிவித்திருக்கிருர், ''சுரண்டல்கள், சமூக அநீதிகள், பசி-பட்டினி, அறியாமை இவற்றை ஒழித்து எவ்வித மோசடிகளையும் தீர்த்து, மக்கள் சுபீட்சமாக வாழும் படியான அரசியலை அமைப்போம். சமதர்மத்துக்காக மக்கள் வாக்களித்துள்ளனர் புதிய தேசத்தை புதிய சமுதாயத்தை புதிய அமைப்பை நோக்கி முன்னேறுவோம்'' என்று தெரிவிக்கின்ருர்.

இவ்விரு கட்சித் தலைவர்களும் ஒத்துழைத்தால்தான் பாகிஸ்தானின் எதிர்காலம் ஜனநாயக முறையிலே முன்னேறக்கூடிய புதிய அரசியலைத் தயாரிக்கமுடியும். இரு கட்சித் தலைவர்களும் இதை நன்கு அறிவர். இரு சாரினருக்குமிடையே கருத்து வேற்றுமைகள் என்ன இருப்பினும், மக்களின் நன்மையே இவர்களது மேலான குறிக்கோள். தேசியசபை கூடிய நூற்றிஇருபது நாட்களில் அவர்கள் ஒரு புதிய அரசியலை தயாரிக்காவிட்டால் மீண்டும் இராணுவ ஆட்சி ஏற்படுமென்று தலைவர் யாஹ்யாகான் எச்சரித்துள்ளார் அந்த எச்சரிக்கை இவ்விரு தலைவர்களுக்கும் மறைமுகமான ஒரு தூண்டுகோலாக இருக்கவும், இரு சாரினரும் விட்டுக்கொடுத்து ஒருமனப்பட்ட அரசியலைத் தயாரிக்கவும் செய்யக் கூடியதாக இருக்கவேண்டும்.

ஆனால் பிரச்னை சுலபமானதல்ல. ஜனுதிபதி யாஹ்யாகான் இன்னும் சில நிபந்தனைகளை விதித்திருக்

அரசியல் திட்டத்தைத் தயாரித்தால், அதைத் தலைவர் யாஹ்யாகான் அனுவசியமாகத் தடுக்க முற்படமாட்டாரென்றே கொள்ளலாம். பாகிஸ்தான் பொதுமக்கள் தங்கள் நாட்டுக்குப் புதிய அரசியலைத் தயாரிக்கவும் அதை நிர்வகித்து நடத்தவும் புதிய பிரதிநிதிகளைத் தெரிவுசெய்து அனுப்பியுள்ளனர். அவர்களது தீர்ப்பை எக்காரணம் பற்றியும் நிராகரித்தால், தலைவர் யாஹ்யாகான் புதிய நிலைமையைச் சமாளிப்பதும் பாகிஸ்தானில் அமைதியை ஏற்படுத்துவதும் சுலபமன்று. பாக் ஜனசக்திதான் முந்திய தலைவரான அயூப்கானை வீழ்த்தியது. அது பெரியதோர் எச்சரிக்கையாகும். இம்மூன்று தலைவர்களுக்குள்ளும் பெரிய வேற்றுமைகள் இருப்பினும் பாக். பொதுமக்களின் மேலான நன்மையைக் கருதி அவர்கள் தங்களுக்குள் விட்டுக்கொடுத்து, புதிய அரசியலைத் தயாரித்து நடத்த அதிக காரணங்களுண்டு. இந்தச் சந்தர்ப்பத்தை விட்டால் இதுபோல் மற்றெரு வாய்ப்பு எப்போது கிடைக்குமென்பதைக் கூறமுடியாது. மற்றவர்களை விட இது பாகிஸ்தானின் புதிய தலைவர்களுக்கு நன்கு தெரியும். பாகிஸ்தானில் நடந்துள்ள இப்பொதுத் தேர்தல், அங்கு ஜனநாயக ஆட்சியை நிலைநிறுத்தி, அண்டை நாடான இந்தியாவுடனுன பிரச்னைகளையும் அமைதியாகத் தீர்த்துக்கொள்ள வழி செய்யுமென்று நம்புவது மிகையல்ல,

## சபாஷ் செல்லப்பிள்ளை!

ஹாங்காங்கிலே நடைபெறும் ஆசிய ஒலிம்பிக் பந்தயத்தில் இலங்கையின் விளையாட்டு வீரர் செல்லப்பிள்ளை (கே) ஹாஸியன் பெண்டிக்ட் ரேஸிலா, இரு நீண்டதூர ஓட்டப்பந்தயங்களில் முதன்மையாக வெற்றி பெற்றதைக் கேட்டு சமும் அனைத்துமே பெருமையும் மகிழ்ச்சியுமடைகின்றது. ஐயாயிரம், பத்தாயிரம் மீட்டர் ஓட்டப்பந்தயங்களில் வென்று அவர் இரு தங்கப்பதக்கங்களைப் பெற்றதுடன், இதுவரை இல்லாதபடி மிகக்குறைந்த நேரத்தில் ஓடி புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார். அவருக்கு நாட்டு மக்களுடன் சேர்ந்து நாம் முழுமூச்சுடன் ''சபாஷ்'' கூறுகின்றேம். பாரிளுமன்ற் சபையிலே விளையாட்டமைச்சர் இச்செய்தியைக் கேட்டு பெருமகிழ்ச்சியுற்று, நாட்டுக்கே பெருமைகொள்ளக்கூடிய விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் இருப்பதிலிருந்துதெரிவதாயும், அரசாங்கம் அவசியமான உதவியும் ஆதரவும் அளிப்பதாயின், மற்றும் பலர் நாட்டுக்கு இவ்வித பெருமை சேர்ப்பரென்றும் சரியாகக் குறிப்பிட்டார். உலகப்புகழ் பெற்ற நமது செல்லப்பிள்ளை (கே) விளையாட்டு பூட்ஸ் வாங்கப் பணமில்லாமல் வெறுங்காலுடன் தாம் ஓட நேரிட்டதாகத் தெரிவித்து இலங்கையின் புகழை உயர்த்த முடியாது. வெளிநாடுகளுக்கு அனுப்பும் நம்விளையாட்டு வீரர்களின் அவசிய தேவை பற்றியும் இலங்கை அரசாங்கம் இனி எவ்வளவு கவனம் எடுக்கவேண்டுமென்பதை இது காட்டுவதாகும். இவ்விதமான புகார்களுக்கு இனி இடமில்லாமல் அரசாங்கம் செய்வதுடன், நாட்டில் ஆங்காங்கே மக்களுக்கு விளையாட்டுகளில் உற்சாகமூட்டி திறமையான வீரர்களை வெளிக்கொணரவும், அவர்கள் கவலையில்லாமல் வாழ்ந்து தங்கள் திறமையை வளர்த்துக்கொள்ளவும் ஆவன செய்யவேண்டும். வீரர் செல்லப்பிள்ளை(கே) யின் சாதனையைப் போற்றவும், மேலும் இவ்வித வீரர்கள் பலர் முன்னுக்கு வரவும் இதனுல் வழி பிறக்கலாம்.

பினர்களைக்கொண்டிருத்தல் வேண்டும்.

78. ஒரு தொகுதி நிர்ணய ஆணைக்குழுவானது, பின்வருமடிப்படையில் நிச்சயிக்கப்பட்ட பல்வேறு தேர்தற்றெகுதிகளாக ஒவ்வொரு மாநிலத்தையும் பிரித்தல் வேண்டும்:-

கடைசியாகக் கணிக்கப்பட்ட குடிசன மதிப்பின் படி மாநிலத்தில் குறிக்கப்பட்டதோர் காலத்திற்குக் குடியிருந்த குடிமக்கள் 75,000 பேர்வரையில்கணிக்கப்படுவார்கள். தொகுதி நிர்ணய ஆணைக்குழுவானது இத்தகைய ஒவ்வொரு 75,000பேரின் பொருட்டும் அம்மாநிலத்திற்கு ஒரு தேர்தற்றெகுதியை ஒதுக்கும் என்பதுடன், ஒவ்வொரு 1000 சதுரமைல் பரப்புக்கும் ஒரு மேலதிகத்தொகுதி என்ற வீதத்தில், சதுரமைல் பரப்பு அடிப்படையிலும் மேலதிகத் தேர்தற்றெகுதிகளை ஏற்படுத்தும்.

79. எம் மாநிலத்திலாயினும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்களைத் தெரிவுசெய்வனவான ஒரு அல்லது ஒன்றுக்குமேற்பட்ட தேர்தற்றெகுதிகளை உருவாக்க தொகுதிநிர்ணய ஆணைக்குழுவானது அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

80. மக்கள்சபையானது. இடையில் கலைக்கப்பட்டாலன்றி, ஐந்தாண்டு காலத்திற்குத் தெரிவுசெய்யப்படல்வேண்டும்

81. தொகுதிநிர்ணய ஆணைக்குழுவானது, ஜனுதிபதியினுல் பத்தாண்டுக்கொருமுறை நியமிக்கப்படுதல் வேண்டும்.

82. மாநிலங்கள்சபை 50 உறுப்பினர்களைக்கொண்டிருக்கும். ஒவ்வொரு மாநிலத்தின் ஆட்சிமன்றத்தினது உறுப்பினர்களையும் அம்மாநிலத்திலுள்ளஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்தினது

பதுடன், அதற்குமுன்னர் கலைக்கப்பட்டுமல்லது கலைக்கப்படல் ஆகாது.

84. மத்தியசட்டமன்றத்தின் இரு சபைகளினதும் உறுப்புரிமைக்கும் மாநிலங்களின் ஆட்சிமன்றங்களின் உறுப்புரிமைக்குமான தகைமையும், வாக்காளரின் தகைமையும், மத்திய சட்டமன்றத்தின் இருசபைகளுக்கும் மாநிலங்களின் ஆட்சிமன்றங்களுக்கும் உறுப்பினர்களைத் தெரிவு செய்தல் பற்றிய சட்டங்களும், இவ்வரசியல் நிர்ணயசபையினுல் ஒரு சட்டவாக்கத்தில் நிரலிடப்படுதல்வேண்டும்.

85. 63ஆம் உறுப்புரையின்கீழ் குடியரசின் ஜனுதிபதியொருவரையும் 67ஆம் உறுப்புரையின்கீழ் துணை ஜனுதிபதியொருவரையும் தெரிவுசெய்யும் பொருட்டு மத்திய சட்டமன்றத்தின் இருசபைகளும் ஐந்து மாநிலங்களின் ஆட்சிமன்றங்களும் ஒருங்கே அமர்தல்வேண்டும்.

86. மத்திய சட்டமன்றத்தின் இரு சபைகளும்-

[அ] 53ஆம் உறுப்புரையின்கீழ் தேசிய பொருளாதாரத் திட்டத்தை அங்கீகரிக்கவும். அத்திட்டத்தை நிறைவேற்றுதற்குப்பணஏற்பாடு செய்யவும்;

[ஆ] 16 (xiii) ஆம் உறுப்புரையின்கீழ் வரிகளையும், வருவாய்களையும், மூலவளங்களையும் மாநிலங்களுக்குப் பங்கீடு செய்யவும்;

[இ] அரசியலமைப்புத் திட்டத்தைத் திருத்தவும் (அரசியலமைப்புத்திட்டமானது இரு சபைகளினதும் உறுப்பினர்களில் நான்கில் மூன்று பங்கினர் அதற்கென வாக்களிப்பதன்மூலமே திருத்தப்படவேண்டும்];

[ச] 84ஆம் உறுப்புரையின்கீழ் இவ்வரசியல் நிர்ணயசபையினுல் ஆக்கப்பட்ட தேர்தற்சட்டத்தை திருத்தவும்;

ஒருங்கே அமர்தல்வேண்டும்.

87. 85ஆம், 86ஆம்உறுப்புரைகளின்கீழான அத்தகைய இணைப்புக்கூட்டங்கள் நடைபெறும் இடமானது, முறைப்படி, ஒரு மாநிலத்திலிருந்து இன்னெரு மாநிலத்திற்கு இடம்பெயர்தல் வேண்டும்.

88. மத்தியசட்டமன்றத்திற்கெனக் குறித்தொதுக்கப்பெற்றவேறுஎல்லா அலுவல்களையும் நடாத்துதற்குக் குடியரசின் தலைநகரமாகிய கொழும்பில் மத்திய சட்டமன்றத்தின் இரு சபைகளும் தனித்தனி கூடல்வேண்டும்.

89 85ஆம், 86ஆம் உறுப்புரைகளின்கீழ் நடைபெறும் இணைப்புக் கூட்டங்களுக்கு மாநிலங்கள் சபையின் தலைவராவர் தலைமைதாங்க[illegible]ப்பட்டிருப்பதாகக் கருதப்படல் வேண்டும்.

90. இவ்வரசியலமைப்புத்திட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கமைய, 86 அ), (ஆ), (ஈ) என்னும் உறுப்புரையின்கீழான இணைப்புக்கூட்டங்களிலும், மத்திய சட்டமன்றத்து இரு சபைகளினதும் தனித்தனிக் கூட்டங்களிலும், அளிக்கப்பட்ட பெரும்பான்மை வாக்குகளினுலேயே முடிவுகள் எடுக்கப்படல்வேண்டும்.

### சட்டமியற்றும் தத்துவமும் நடைமுறையும்

91. இவ்வரசியலமைப்புத்திட்டத்தில் இருக்கின்ற வரையறைகளுக்கு அமைய, இலங்கைச் சமஷ்டிக் குடியரசின்பாராளுமன்றமானது, 16ஆம் உறுப்புரையின்கீழ் அல்லது இவ்வரசியலமைப்புத்திட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாடுகளின்கீழ், குடியரசின் அதிகாரத்திற்கு ஒப்படைக்கப்பட்ட எல்லா விடயங்கள் தொடர்பிலும் சட்டமாக்கத் தத்துவமுடைத்தாதல் வேண்டும்.

92. பாராளுமன்றத்தால் ஆக்கப்பட்ட எச்சட்டமும்-

(அ) ஏதேனும் மதத்தைச் சுதந்திரமாக அனுஷ்டிப்பதைத் தடைசெய்தல் அல்லது கட்டுப்படுத்தல்; அல்லது

(ஆ) ஏனைய இனத்தை, மொழியை, அல்லது மதத்தைச் சேர்ந்த சமூகத்து ஆட்கள் ஆளாக்கப்படாத அத்தகைய குறைபாடுகளுக்கு ஏதேனும் இனத்தை, மொழியை அல்லது மதத்தைச்சேர்ந்த சமூகத்து ஆட்களை ஆளாக்குதல்; அல்லது

(இ) ஏனைய இனத்தை, மொழியை அல்லது மதத்தைச் சேர்ந்த சமூகத்து ஆட்களுக்கு வழங்காத ஏதேனும் அத்தகைய சிறப்புரிமையை அல்லது தகமையை ஏதேனும் இனத்தை மொழியை அல்லது மதத்தைச் சேர்ந்த சமூகத்து ஆட்களுக்கு வழங்கல்.

என்பதைச்செய்தலாகாது

93 92ஆம் உறுப்புரையை மீறி ஆக்கப்பட்ட சட்டமெதுவும் அத்தகைய மீறுதல் அளவுக்கு வறிதாதல் வேண்டும்.

94. ஒருசட்டமூலமானது இருசபைகளிலொன்றில் முதலில் சமர்ப்பிக்கப்படலாம். நிதி தொடர்பிலான ஒருசட்டமூலமானது அமைச்சரொருவரினுல்மக்கள்சபையில் மட்டுமேமுதலில்சமர்ப்பிக்கப்பட வேண்டும்,

95. ஒரு சட்டமூலமானது, மக்கள் சபையினுல் அதன் எல்லா வாசிப்புகளின் போதும் நிறைவேற்றப்பட்டிருக்கும் போது, அது இரு சபைகளினுலும் நிறைவேற்[illegible]ப்பட்டிருப்பதாகக் கருதப்படல் வேண்டும்.

96. மக்கள்சபையினுல்முனையப்பட்ட ஒரு சட்டமூலமானது, அச்சபையில் இரண்டாம் வாசிப்பில் நிறைவேற்[illegible]ப்பட்டிருக்கிறபோது, ஏற்றுக்கொள்ளுமாறு மாநிலங்களின்சபைக்கு அனுப்பப்படல்வேண்டும்.

97. 96ஆம் உறுப்புரையின்கீழ் ஏற்றுக்கொள்ளதற்கென மாநிலங்கள் சபைக்கு அனுப்பப்பட்டவொருசட்டமூலமானது, மாநிலங்கள் சபையினுல் அதன் எல்லா நிலைகளிலும் பரிசீலிக்கப்பட்டு, அதுநிதி தொடர்பிலான சட்டமூலமெனச் சபாநாயகரால் சான்றளிக்கப்பட்டதாயின் அச்சபையினுல் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து ஒருமாதத்திற்குள்ளாகவும் வேறு ஏதேனும் சட்டமூலமாயினும் 6 மாதகாலத்திற்குள்ளாகவும் மக்கள் சபைக்குத் திருப்பியனுப்பப்படல் வேண்டும்

98. 96ம் உறுப்புரையின்கீழ் மாநிலங்கள் சபைக்கு ஏற்றுக் கொள்வதற்கென அனுப்பப்பட்டவொரு சட்டமூலத்தை அச்சபையானது நிராகரிக்குமாயின், அங்ஙனம் நிராகரிக்கப்பட்ட சட்டமூலம்நிதிதோடர்பிலாதாக இல்லாதவரையில் மக்கள் சபையானது, நிராகரிக்கப்பட்ட அச்சட்டமூலம் தமக்குத் திருப்பியனுப்பப்பட்ட தேதியிலிருந்து முழு ஆறுமாதங்கள் கழியும் வரை அச்சட்டமூலத்தை குழுநிலையில் பரிசீலிக்க முற்படலாகாது.

99, 96ம் உறுப்புரையின்கீழ் மாநிலங்கள் சபைக்கு ஏற்றுக் கொள்வதற்கென அனுப்பப்பட்டநிதி தொடர்பிலானவொரு சட்டமூலத்தை அச்சபையானவு நிராகரிக்குமாயின், மக்கள்சபையானது நிராகரிக்கப்பட்ட அச்சட்டமூலம் கிடைக்கப்பெற்றதன் மேல் அதைக்குழுநிலையில் பரிசீலிக்க முற்பட்டு தீர்த்தல் வேண்டும்

100 96ஆம் உறுப்புரையின்கீழ் ஏற்றுக் கொள்வதற்கெனமாநிலங்கள் சபைக்கு அனுப்பப்பட்டவொரு சட்டமூலத்தை திருத்தங்களுடன் அல்லது, திருத்தங்களின்றி அச்சபை ஏற்றுக்கொள்ளுமாயின் மக்கள் சபையானது அச்சட்டமூலம் கிடைக்கப்பெற்றதன் மேல் அதனை குழுநிலையில் பரிசீலிக்க முற்பட்டு அதனைத் தீர்த்தல் வேண்டும்,

101. மாநிலங்கள்சபையினுல் முனையப்பட்டவொரு சட்டமூலமானது அச்சபையினுலேயே எல்லா நிலைகளிலும் பரிசீலிக்கப்படல்வேண்டும்; அச்சட்டமூலம் அச்சபையினுல் ஏற்கப்படுமாயின், அதனைத் தீர்த்தற்கென அது மக்கள்சபைக்கு அனுப்பப்படல்வேண்டும்

102 ஜனுதிபதியானவர் அதற்குச் சம்மதமளித்தாலன்றி எச்சட்டமூலமும் பாராளுமன்றத்தினுல் ஆக்கப்பட்ட சட்டமாதலாகாது

தொடரும்

## கார்த்திகைத் திருவிழா

ஊர்காவற்றுறை.புதன்

சரவணை - தேவபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் கார்த்திகைத்திருவிழாவின்போது விசேட அபிஷேக ஆராதனையும் சுவாமி வீதிவலம்வரும் காட்சியும் தீபதரிசனையும் நடைபெற்றன.

## கவியரங்கேற்றம்

யாழ்ப்பாணம், வியா.

''கவிதை எல்லோராலும் இயற்றமுடியாது, ஓவியமும் எல்லோருக்கும் வருவதில்லை சொல்லோவியமான கவிதையை இயற்றும் கவிஞன் சிறந்த கவின்கலை ஒன்றைப் படைப்பவனுகின்ருன்'

யாழ்ப்பாண மத்திய கல்லூரி தமிழ் மன்றம் நடத்திய கவியரங்கேற்றத்தின் போது தமிழ்மன்ற இயக்குநர் திரு சண்முக குமரேசன் தொடக்கவுரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினுர். இக்கவியரங்கில் யாழ். மத்திய கல்லூரி மாணவர் ஐவர் கலந்துகொண்டனர்.

பண்டிதர் சி கார்த்திகேயன் தலைமையில் நடந்த இக்கவியரங்கில் செல்வன்கள் ஆனந்தபிரசாத், குகானந்தன், சிவகுருநாதன் வ. திருச்செல்வம், ச. வாசுதேவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## 'பாடசாலைகளில் அரசியல் வேண்டாம்'

பத்தேகம, புதன்

ஆசிரியர்கள் எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதிலும் பாடசாலைகளில் அரசியல் பரவுவதற்கு இடம்கொடுக்காமல், இந்த நாட்டின் வருங்கால செல்வங்களான குழந்தைகளை சிரேஷ்ட பிரஜைகளாக வளர்த்தெடுக்க முயற்சிசெய்ய வேண்டும் என்று அக்மீமன ஆட்சிமன்ற உறுப்பினர் சேனபால சமரசேகர கூறினுர்

பாடசாலை பரிசளிப்பு விழாவொன்றில் அவர் உரை நிகழ்த்திஞர்.

ஐந்து ஆண்டுகளின் பின்னர் மக்களின் விருப்பத்துக்கிணங்க புதிய யுகம் ஒன்று பிறந்து இருக்கின்றது. எனவே இனி கட்சி பேதங்களை விடுத்து நாட்டின் முன்னேற்றத்துக்காக உழைக்க எல்லாரும்முன்வரவேண்டும் என்று அவர்கேட்டுக்கொண்டார்.

## கோயிலில் களவு

அம்பன், திங்கள்

உடுத்துறை 5ம் பனைப் பிள்ளையார் கோயிலில் சில தினங்களுக்கு முன்னர் கோயில் தளபாடச் சாமான்கள் ஓடுபிரித்து களவாடப்பட்டுள்ளது; இதைப்பற்றி பொலிசார் புலன்விசாரணை செய்கின்றனர்,

## நேர்மையான ஆசிரியர்களை கௌரவிக்கத் திட்டம்

மாத்தறை, புதன்

'நேர்மையாகத் தங்கள் கடமையைச் செய்த ஆசிரியர்களைக் கௌரவிக்க குறுகிய காலத்தில் புதிய திட்டம் ஒன்று தயாரிக்கப்படும்.'

பட்டியான மகாவித்தியாலய ஒய்வு பெறும் அதிபரின் பிரியாவிடையின்போது உரையாற்றிய உதவிக் கல்வியமைச்சர் திரு. பி. வை. துடாவை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது!

சில நாடுகளில் மேற்குறிப்பிட்டவாறு ஆசிரியர்கள் கௌரவிக்கப்படுகிருர்கள். அதே போன்று இங்கும் எமது நாட்டிலும் செய்ய நான் தீர்மானித்துள்ளேன். மிகக் குறைந்த லீவு எடுக்கும் ஆசிரியர்களுக்கு பதவியுயர்வுகள் வழங்கப்படும்போது கூடிய புள்ளிகள் வழங்கப்படும். பாடசாலையே சேஷ்விசகி கல்வி பெறுவதற்குரிய நிலையங்களாகும். எனவே ஆசிரியரது சேவை சாதாரணமானதல்ல இவர்கள் இச்சேவைக்குத் தங்களை முற்ருக அர்ப்பணிக்கவேண்டும்

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org